# மக்கள் மறுவாழ்வு

மக்கள் மறுவாழ்வு

சந்தா விவரம்:

தனிப்பிரதி 75 காசு
ஆண்டு சந்தா ரூ. 10-00

விவரங்களுக்கு:
"மக்கள் மறுவாழ்வு"
த. பை. எண்: 5560
சென்னை-600094

மலர்: 4 வைகாசி - மே 1986 விலை 75 காசு இதழ்: 8


## மலையகத் தமிழர்-தாயகம் திரும்பியோர் நல உரிமைக்கே

# போராட சூளுரைப்போம்!

**'ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தும் நாடற்ற மக்களாக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டு சீரழிந்த வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் மலையக மக்களின் - தாயகம் திரும்பியோர்களின் உரிமைகளுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் பாடுபடுவோம் என்று நூற்றாண்டு கொண்டாடும் இப்மேதினத்தில் சூளுரைப்போம்'**

தாயகம் திரும்பியோர் மக்கள் உரிமை இயக்கம் இம் மே தினத்தில் மலையக மக்களுக்கும்-தாயகம் திரும்பிய மக்களுக்கும் அறை கூவவிடுகிறது.



இவர்களது உழைப்பில்தான் ஒரு நாட்டின் பொருளாதாரமே தங்கி இருக்கிறது. ஆனால் இவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்- அடக்கப்படுகிறார்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு நாடற்ற மக்களாக்கப்பட்டிருக்கிறார்கள். நலிந்து, சிதைந்து வரும் சமூகமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த தொழிலாள வர்க்கம் தலை நிமிர்வதெப்போது? 0

மலையகத் தமிழ் மக்கள் இலங்கையின் மொத்த வருமானத்தில் 75 சதவீதமான பங்கை நெற்றி வியர்வை நிலத்தித் சிந்தி உழைத்துச் கொடுக்கின்றனர். வருடம் 400 கோடிக்கு மேல் வருமானத்தை பெற்றுக் கொடுத்து நாட்டின் பொருளாதார!த்திற்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றனர்.

ஆனால் இம்மக்கள் தமிழர்கள் என்ற இனரீதியில் - இன வாதத்தின் கொடூரத் தாக்குதலில் அடக்கப்பட்டு- கொடுக்கப்பட்டு வரும் தொழிலாளர் வர்க்கமாக இருந்து வருகிறார்கள்.

பல தலை முறையினராக அந்த மண்ணில் வாழ்ந்தும் குடியுரிமையிழந்து நாடற்ற மக்களாக்கப் பட்டார்கள். ஒப்பந்த அடிப்படையில் நாடு கடத்தவும் படுகிறார்கள்.

தாயகம் திரும்பிய மக்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, பிற மாநிலங்களிலும் குடியமர்த்தப் படுவதால் சிறு சிறு கும்பல்களாக சிதைந்து வரும் சமுதாயமாக தமது மொழி, கலை, கலாச்சாரம், சமூக வாழ்க்கையையே இழந்து இனம் காண முடியாதவர்களாக மறைந்து வருகிறார்கள் - வெறும் கூலிகளாக கொத்தடிமை வாழ்வுக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்,

இதிலிருந்து மலையக மக்கள் தாயகம் திரும்பியோர்கள் தடுக்கப்பட வேண்டும் - மீட்கப் பட வேண்டும்.

பல தலை முறையினராக வாழ்ந்து தமது உழைப்பால், உதிரத்தால், வியர்வையால் உருவாக்கி பொன் கொழிக்க வைத்திருக்கும் நிலத்திலேயே அவர்கள் வாழும் உரிமைகள் பெற வேண்டும். அது அவர்களின் அனுபவ பாத்தியமான உடமையாக்கப்பட வேண்டும். அந்த மண்ணிலிருந்து நாடு கடத்தப்படக் கூடாது.

நாடு கடத்தப்பட்டு இந்தியா திரும்பியுள்ள மக்கள் தமிழகத்திலேயே குடியமர்த்தப்பட வேண்டும். அவர்களது பழக்கத்திற்கும், அனுபவத்திற்கும் கேற்ற வகையில் உரிய இடங்களில் குடியமர்த்தப் படுவதோடு - வேலை மற்றும் பொருளாதார வாய்ப்புகளை அளிக்க வேண்டும் - இவர்கள் வாழ்வுக்கு மத்திய — மாநில அரசுகள் உத்திவாதம் அளிக்க வேண்டும்.

இந்த லட்சியங்களை முன் வைத்து இவர்களது உரிமைகளை வென்றெடுத்து, சமூக வாழ்வு மேலோங்க ஒன்றிணைந்து பாடுபடுவோம்" என்றும் இயக்கம் தனது மே தினச் செய்தியில் அழைப்பு விடுகின்றது. 0

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 4 மே 1986 இதழ்: 8


## ஈழ விடுதலை இயக்கங்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கை !

திருச்சி கொட்டப்பட்டு முகாமிலிருந்து இரு அகதிகளும் ஒரு இந்தியரும் கடத்தப்பட்டிருக்கிறார்கள். கடத்தப்பட்ட இருவாரங்களுக்குப் பின்னால் ஒருவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மற்றவர்கள் கதி என்ன என்று இதுவரை தெரியவில்லை.

இச்சம்பவங்கள், அகதிகள் முகாமிலும் வெளியிலும் இருக்கும் அகதிகள் மத்தியிலும் அகதிகள் மத்தியில் சமூகசேவைகள் புரிவோர் மத்தியிலும் பெரிதும் கலக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. கடத்தப்பட்டவர்கள் அனைவருமே இந்திய வம்சாவழித் தமிழர்களாக இருப்பதால் இது இலங்கையிலிருந்து அகதிகளாகவும் ஒப்பந்த அடிப்படையில் திரும்பியுள்ளவர்கள் மத்தியில் கசப்பான உணர்வுகளையும் தோற்றுவித்துள்ளது.

கடத்தப்பட்டவர்களில் இருவர் அகதிகள், அகதிகள் மத்தியில் சேவை செய்யும் ஒரு அமைப்பின் தலைவரும் செயலாளருமாவர்- தலைவராக இருக்கும் ஜூட் பெர்ணாண்டோ துடிப்பு மிகுந்த இளைஞர். அச்சமின்றி எதையும் பேசவும் செய்யவும் தக்கவர் அகதிகள் மத்தியிலும் சிறந்த சேவை ஆற்றி வருகிறவர். செயலாளரான அருள் அண்டனி திருமணமான ஒரு குடும்பத்தவர் என்றாலும் அகதிகள் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு சேவை செய்துவந்தார். தூய்மையுள்ள ஒரு சமூக சேவையாளராவர். இருவருமே ஈழ விடுதலையில் ஈடுபாடு கொண்டவர்கள்

விடுவிக்கப்பட்டுள்ள திரு. பி. எஸ். நாதன், மலையக எழுத்தாளர், கவிஞர், நல்ல சிந்தனையாளருமாவார். 1973-ல் செய்த ஒப்பந்த அடிப்படையில் தாயகம் திரும்பிய இவர் இதுவரை தாயகம் திரும்பியோர் மத்தியில் சமூகசேவை செய்து வருவதோடு இங்குள்ள சமூக சேவா அமைப்புகளோடு தன்னை இணைத்துக் கொண்டவர் செல்வாக்கும் மிகுந்தவர். ஈழ விடுதலை இயக்கத்தினரோடு தொடர்பு கொண்டு தன்பங்களிப்பை செலுத்தி வருகிறவர்.

இப்படிப்பட்ட இவர்கள் கடத்தப்பட்டும், சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

இந்த சம்பவம், ஈழ விடுதலை இயக்கங்களில் இலட்சிய தூய்மையிலும் கடமை உணர்விலும் ஒரு ஐயப்பாட்டினையே ஏற்படுத்தியுள்ளது. ஈழ விடுதலை இயக்கங்கள் அணுகுமுறையிலும் வழிமுறையிலும் தவறான போக்கினை இது போன்ற நடவடிக்கைகளில் கடைப்பிடிக்கின்றனவா? தவறான தகவல்களை, எண்ணங்களை, நோக்கங்களை வைத்துக்கொண்டு செயல்படுகின்றனவா? இது ஈழ விடுதலையில் விடுதலை இயக்கங்கள் மீது கொண்ட நம்பிக்கையைப் பாழ்படுத்தாதா?

இந்த கடத்தலை செய்தது ஒரு குறிப்பிட்ட விடுதலை இயக்கம் என நிருபணமாக தெரிகிறது. ஆனால் இதுவரை அது இதற்கு எந்த சமாதானமும் சொல்லவில்லை. உரிமையும் கொண்டாடவில்லை. ஈழ விடுதலை இயக்கங்களைப் பொறுத்தவரை, ஈழவிடுதலைக்கு எதிரானவர்கள், தவறு செய்தவர்களை கைது செய்தல் விசாரணை செய்தல், சித்திரவதை செய்தல், நீதி வழங்குதல் போன்ற நடவடிக்கைளுக்கு பொறுப்பேற்பது உரிமை கொண்டாடுவதும் வழக்கம். ஈழத்தில் இவை எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் சரியானதாகவே இருக்குமென நம்பும் வேளையில் (ஆனால் அதை இங்கு நடத்தலாமா) இச்சம்பவத்திற்கு இதுவரை யாரும் எந்த பொறுப்புகளையும் ஏற்கவில்லை, ஏன்?

அப்படியானால் இந்த கடத்தல் குறிப்பிட்ட அந்த இயக்கத்தால் நடத்தப்படவில்லையா? அல்லது அதன் பேரால் நடத்தப்பட்டதா! அல்லது அதில் இருக்கும் சிலரின் அத்துமீறிய செயலில் நடத்தப்பட்டதா?

அகதிகள் முகாமிலுள்ள அகதிகள் மத்தியில் சுமுகமான உறவுகள் இல்லை; பிராந்திய பேதத்தோடே ஒருவரை ஒருவர் அணுகும் முறை இருக்கிறது. இதனால் அவ்வப்போது சச்சரவுகள் மூண்டு வருகின்றன; இதே நிலைதான் திருச்சி முகாமிலும். இந்த பிராந்திய பேதமும், யாழ்ப்பாணத்தவர்கள் நிறைய இருக்கும் முகாமில் சிறுபான்மையாக இருக்கின்ற இவர்கள் தலைமை தாங்குவதா? என்ற காழ்ப்புணர்ச்சியும் சிலரது தீயச்செயலுக்கு இவர்கள் தடையாக இருக்கிறார்களே என்பது போன்ற வெறுப்புமே இவர்கள் கடத்தப்பட்டதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது-இதுபோன்ற காரணங்களுக்காக கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இச்சம்பவத்திற்கு பின்னால் திருச்சி முகாமில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் சிலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள்;கேலி செய்தல், அச்சம் மூட்டும் வகையில் பேசுதல் போன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. ஆத்தூர் அகதிகள் முகாமில் இருவர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். முகாம்களுக்கு வெளியிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன-'தோட்டக்காட்டான்கள் இங்கு என்னடா வந்து பேசுகிறீர்கள்?' என்று சண்டைக்கு இழுப்பது, அடிப்பது போன்ற சம்பவங்களும் நடக்கின்றன என்ற புகார்கள் வருகின்றன,

இந்த பிராந்திய பேதங்கள் கசப்பான அனுபவங்கள் மலையகத் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இடையிலிருந்து மறைந்து வரும் பழைய கசப்புகளை மீண்டும் கிளறி விடும்-மலையக மக்களுக்கு ஈழ மக்கள் மீதும் - ஈழ விடுதலை மீதும் அவ நம்பிக்கையையும் அலட்சியத்தையுமே ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

அது மட்டுமல்ல; பொது நல ஸ்தாபனங்கள் அகதிகளுக்கு உதவவேண்டும்; கூட்டுத்திட்டங்கள் வகுக்க வேண்டும்' என்று அரசே வலியுறுத்தி வருகிறது. ஆனால் சமூக சேவா அமைப்புகள் மீது ஐயம் கொள்வதும், அவர்களை கடத்துவதும், சித்திரவதை செய்வதும் அகதிகளுக்கு யாரும் உதவ முன்வராத நிலைக்கே தள்ளிவிடும்.

மலையாக மக்கள் மத்தியிலும் சேவையாற்ற வருகிறவர்கள் மிகக்குறைவே. இது போன்ற சம்பவங்கள் அவர்களை அமைப்பு ரீதியாக வழி நடத்தி மேம்பாட்டிற்கும், விடுதலைக்கும் இட்டுக் செல்வதற்கு தடையாக அமையும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம். இதை யெல்லாம தமிழீழ விடுதலை இயக்கங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென விரும்புகிறோம்.

''வட-கிழக்கு வாழ்மக்கள் மலையக மக்களின் பிரச்சனையின் பால் அக்கறை கொண்டுள்ளனர்-ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களின் ஒரு பகுதியினர் மலையகத் தொழிலாளர் - இவர்களுக்கு தீர்வு ஈழப் போராட்டமே - ஐக்கியத்தை கடைபிடிக்க வேண்டும்'' என்பது கொள்கை அளவில், ஏட்டளவில் இருந்து விடக் கூடாது.

இதைப்போன்ற லட்சியத்தை-எண்ணங்களை, பிராந்திய பேதம் பேசி சிறுபான்மையினராக இருக்கும் மலையகத்தமிழர்களை அடக்கி ஒடுக்க முயலும் மக்களிடம் எடுத்துக் செல்ல வேண்டும்.

இது போன்ற சம்பவங்களுக்கு காரணமாக இருப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். O

# தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளைத் தீர்க்கக் கோரி

## முசுறியில் உண்ணாவிரதம்

தாயகம் திரும்பியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு அரசு அதிகாரிகள் ரசீது கொடுக்க வேண்டும்-

தாயகம் திரும்பியோர் கடன் மற்றும் இதர பிரச்சினைகளுக்கு விண்ணப்பிக்கும் படிவங்களை விற்பனை செய்வதை நிறுத்தி இலவசமாக வழங்க வேண்டும்-

ஓராண்டுக்குள் மறுவாழ்வு உதவி பெற மனு செய்தவர்களுக்கும், வழங்கிய கடன் தொகையினை முறையாக பயன் படுத்தியவர்களுக்கும் மேலதிக கடன்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்-

முதலாவது வீட்டு கடன் பெற்ற உடன் சிமெண்ட் பர்மிட்டும் காலதாமதமின்றி வழங்க வேண்டும்-

மறுவாழ்வு கடன் பெறுவதற்கு ஒரு வருடத்திற்குள் மனு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க வேண்டும்-

தாயகம் திரும்பியோர் அரசு அலுவலகங்களில் ஒப்படைத்துள்ள குடும்ப அட்டை, கடவுச் சீட்டுகளை திருப்பி அளித்தல் வேண்டும்-

தாயகம் திரும்பியோரிடமிருந்து குடும்ப அட்டை கடவுச் சீட்டு முதலியவைகளை பெற்று அவர்களை ஏமாற்றும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அவர்களிடமிருந்து குடும்ப அட்டையையும் கடவுச் சீட்டையும் பெற்றுத் தர வேண்டும்-

மறுவாழ்வு உதவிகள் நேரிடையாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இடைத்தரகர்கள்-லஞ்சம் இவைகள் தடுக்கப் பட வேண்டும்-

தாயகம்திரும்பியோர்களுக்கு வீடுகட்டி தருவதாக ஏற்பாடு செய்து அரைகுறையாக விட்டுவிட்டு மோசடி செய்துள்ள இடைத்தரகர்கள் / ஒப்பந்தக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அரைகுறையாக உள்ள வீடுகளை உடனே கட்டித்தரவேண்டும்-

தாயகம் திரும்பிய பிள்ளைகளுக்கு உண்டான கல்விச்சலுகைகள் அனைத்தையும் பட்டப்படிப்பு வரை முறைப்படி வழங்க வேண்டும்-

தாயகம் திரும்பியவர்களை அரசு அலுவலகங்களிலும் பிற இடங்களிலும் இழிவாக பேசுவதை தடுக்கும் வகையில் அரசு கவனம் செலுத்த வேண்டும்-

78-79ம் வருட சட்டபடி தாயகம் திரும்பும் மக்களுக்கு சொத்து வாங்குதல் விற்றல் அல்லது மனுக்கொடுத்தல் முதலியவற்றுக்கு பதிவுக் கட்டண சலுகை செய்து கொடுத்தல் வேண்டும்-

தாயகம் திரும்பிய மக்கள் சொத்துக்கள், பிரச்சினைகள், ஜீவனாம்சம் குறித்த வழக்குகள் உடனுக்குடன் பரிசீலனை செய்து தீர்க்க வேண்டும்-

கரூர், குளித்தலை பகுதிகளில் வாழும் தாயகம் திரும்பிய மக்களுக்கு அப்பகுதியில் உள்ள அலுவலகங்கள் திருச்சிக்கு மாற்றப்பட்டதனால் ஏற்பட்டுள்ள வீண் சிரமங்களை போக்குவதற்காக மீண்டும் அதே பகுதியில் அலுவலகங்கள் ஏற்படுத்த வேண்டும்-

**தாயகம் திரும்பிய மக்கள்** தமக்கு ஏற்படும் குறைகள்பற்றி தெரிவிக்க மறுவாழ்வு அலுவலகங்களில் புகார் பெட்டி வைக்க வேண்டும்-

தாயகம் திரும்பி பல வருடங்களாகியும், இன்னமும் பலர் வாக்காளர் பதிவு ஏட்டில் பதிவு செய்யப்பட வில்லை. இதனால் வாக்களிக்கும் உரிமையை பிரயோகிக்க முடியவில்லை. இதை நிவர்த்தி செய்ய ஆவண செய்ய வேண்டும்-

இக்கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 31-3-86 அன்று திருச்சி மாவட்டம் முசிறி ஆர்.டி.ஓ. அலுவலகம் முன் தாயகம் திரும்பியோர் பலர் அடையாள உண்ணா விரதம் இருந்தனர்.

முசிறி, குளித்தலை, கரூர், லால்குடி துறையூர் வட்டாரங்களிலிருந்து பல தாயகம் திரும்பியோர்கள் இவ்உண்ணா விரதத்தில் கலந்துகொண்டனர். ○

## குறைகள் களைய ஆர்.டி.ஓ. நடவடிக்கை

லால்குடி வட்டம் எதுமலை கிராமத்திலுள்ள தாயகம் திரும்பியோர் காலனிக்கு ஆர்.டி.ஓ. வருகைப் புரிந்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார். இக்காலனி வாசிகளின் பலவேறுபட்ட பிரச்சனைகளைத்தீர்த்து வைப்பதாக ஆர்.டி.ஓ. உறுதி அளித்துள்ளார்.

## மறுவாழ்வுத் திட்டத்தில் அரசு அக்கறை கொள்ள வேண்டும்!

ஈழம் குடி பெயர்ந்தோர் அமைப்பு சங்கத்தின் ஆண்டு கூட்டம் சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் 4-4-86 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. தா. பாண்டியன், பேராசிரியர் பெரியார் தாசன், திரு. ஆர். ஆர். சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

ஒப்பந்தங்களினால் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குக் மக்களின் வாழ்க்கை ஆண்டுகள் பல கடந்தும் சீர் அமைக்கப்படாமை எம்மைக் கவலை கொள்ளச் செய்கின்றது. இந்திய மைய அரசினதும், மாநில அரசினதும் மறுவாழ்வுத் திட்டங்கள் செயல் ஊக்கம் அற்றதனால் எந்தவித நிவாரணமும் பெறமுடியாமல் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பதைப் பொதுக்குழு சுட்டி காட்டுகின்றது.

ஒப்பத்தப்படி குடிபெயர்ந்து வந்த மக்களின், இதுவரை தனியார் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட மக்களின் வேலையை நிரந்தரம் செய்வதோடு, இனிவரும் மக்களுக்கு அரசுத் துறையில் வேலை வழங்க மைய, மாநில அரசுகளை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

தமிழகத்திலுள்ள சில தீய சக்திகள் குடிபெயர்ந்த மக்கள் மீது கொடுமைகள் இழைப்படுவதையும் - கொத்தடிமைகளாய்க் கொள்வதையும், கண்டனம் செய்யும் நாம், இது குறித்து தமிழக அரசும் சமூக நல நிறுவனங்களும் அக்கறை கொள்ளவேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறோம்.

குடி பெயர்ந்துவரும் மக்களை இதுவரை கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற வேற்று மாநிலங்களில் குடியேற்ற மைய அரசு எடுக்கும் முடிவினை எமது பொதுக்குழு முற்றிலும் எதிர்க்கிறது. மேலும் இம்மக்களுக்கு மைய-மாநில அரசுகள் தமிழகத்தில் மறுவாழ்வு பொருளாதாரத் திட்டங்களை அளிக்குமாறு வலியுறுத்துகிறோம்.

முதலாக பல தீர்மானங்களை இச்சங்கத்தின் பொதுக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது. ○

# தஞ்சம்புகுந்த மண்ணில் தவறுகள் செய்யலாமா ?

மதிப்பிற்குரிய இலங்கை அகதிகளே! இலங்கை இனப் படுகொலையில் சிக்கித்தவித்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தமிழகம் வந்தோம்....ஆனால் இன்றும் நமது தோழர்கள் உறவினர்கள் போர் விமானங்கள் மூலம் இனவெறி அரசால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாமோ? அதைப் பற்றிய சிந்தனையே இல்லாது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மில் ஒருசிலர் செய்யும் தவறுகளால் நம்மவர்களே பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம்! இது நமக்கே நியாயமா?

இலங்கையில் நமது வாழ்க்கை சிறந்து விளங்கியதுதான் என்றாலும் வந்த நாட்டிற்கு ஏற்ப நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டாமா? 'பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுத்துண்டு நமக்கு, என்ற பழமொழி மறந்துவிட்டதா?

தமிழ்நாட்டிலே நம்போன்ற அகதிகள் சுமார் 130 முகாம்களில் இருக்கின்றனர். ஆனால் அவர்களில் நகரங்களை அண்டியுள்ள முகாம்களுக்கே சமூக சேவை நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன,

இதுபோன்ற நிறுவனங்களின் உதவிகளைக்கூடசரியாக பெற்றுக் கொள்ளாமல் அவர்களை ஏமாற்றுகிறோம், அவமதிக்கிறோம் (ஒரு சிலர்). அதனால் மனம் நொந்த அவர்கள் அகதிகள் மத்தியிலேயே சேவை செய்ய வெறுத்து விடுகிறார்கள். பல நிறுவனங்கள் நஷ்டப் பட்டும் உள்ளன.

இதனால் கிராமப்புறங்களில் உள்ள முகாம்களில் உள்ள நமது மக்கள் எந்த உதவியும் குறிப்பாக மருத்துவ வசதிகூட இல்லாது கஷ்டப்படுவதை நாம் அறிவதில்லை. தவிர, அரசு வழங்கும் சலுகையில் குடித்துக் கும்மாளம் போட்டு' ஊர் மக்களுடனும். ஏனைய அகதிகளுடனும் தகராறுகள் வளர்ப்பதும், இதை மேலும் பெரிது படுத்தி போராளிகளுக்கு கலங்கம் விளைவிப்பதும் போலீஸ் வரை செல்வதுமாக உள்ளது சரியானதா?

தமிழ்நாட்டில் உள்ள 130 முகாம்களில் குடி. பழக்கம் இல்லாத ஒரே முகாம் தென்னாற்காடு மாவட்டத்தில்உள்ள அய்யம்பேட்டை புயல் பாதுகாப்பு இல்லம் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து நம்மவர்கள் சிலர் செய்யும் சிறு தவறுகளைக்கூட அரசு அதிகாரிகளுக்கு மொட்டைக் கடதாசி மூலம் தெரியப்படுத்தி அவர்கள் பதிவு நிராகரிக்கச் செய்து அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு சிரிப்பதா?

அரசு அதிகாரிகளை அவதூறான வார்த்தைகளால் திட்டுவது என்பவைவற்றை சர்வசாதாரணமாக செய்து வருகிறோம். இதனால் அகதிகள் மேல் ஆத்திரம் கொண்டுள்ள அதிகாரிகள் சமயம் பார்த்து பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

அத்துடன் கடத்தல், களவு போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ள சிலரால் அனைத்து அகதிகளுக்கும் கெட்ட பெயர் கிடைப்பதுடன் அரசு அதிகாரிகள் கட்டளைகளுக்கும், நிர்பந்தங்களுக்கும் அனைவரும் பழியாகிறார்கள். வசதி படைத்தவர்கள் இவற்றில் இருந்து தப்பிக்கலாம். வசதி இல்லாதவர்களின் நிலைபற்றி சிந்திக்க வேண்டாமா?

தமிழக மக்களின் ஆதரவில் தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் நாம் 'இலங்கைத் தமிழர்கள் மோசமானவர்கள்' என்ற அவப் பெயரைத்தடுத்து, தமிழ் மக்களின் அனுதாபத்தை மேம்படுத்தி ஒற்றுமையாக நின்று நமது விடுதலைப் போராட்டத்தை சரியான வழியில் நடத்திச் சென்று 'சுதந்திர நாடு'' காண வேண்டும் என்ற ஒரே உணர்வுடன் செயல்படவும் இனியாவது நமது தவறுகளை திருத்திக்கொள்ளவும் முற்பட வேண்டும்.

'நித்தியன்'

திருச்சி




# தமிழினம் அழிந்துகொண்டிருக்கும் போது குடும்பக் கட்டுப்பாடு அவசியம் தானா ?

இலங்கை அகதிகள் பிரச்சினைகளை தெள்ளத் தெளிவாக மக்கள் மறுவாழ்வு பத்திரிகையில் வெளியிட்டு தீர்த்து வருவதை பத்திரிக்கை படித்ததின் மூலம் அறிந்து வருகின்றோம்.

இதன் கீழே குறிப்பிட்டுள்ள பிரச்சனையை தங்கள் மக்கள் மறுவாழ்வு இதழில்வெளியிட்டு தீர்த்து தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையில் சிங்கள ராணுவம் தமிழர்களை தினமும் அணுகிக் கொன்றுகுவித்து வருவதால் உயிர் பாதுகாப்பு தேடி தமிழகம் மண்டபம் முகாமுக்கு அகதிகளாக வந்து தங்கியிருக்கின்றோம், அரசு உதவித் தொகை பற்றாக் குறையால் சிலர் வறுமையால் வாடுகிறார்கள். இப்படிப்பட்ட பெண்களிடம் பணத்தாசை கூறி குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ள ரூ. 150, ரூ. 200 தருவதாக அழகம்மா என்ற பெண் மற்றும் சில பெண்கள் பெண்களை தேர்வு செய்து வேறு அரச அலுவலர், வேறு நபர்கள் மூலம் குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு அனுப்பி விடுகிறார்கள். பேசியபடி பணமும் தராமல் ஏமாற்றி வருகிறார்கள்.

அழிந்து கொண்டிருக்கும் எங்களது தமிழினத்தை இன விருத்தி செய்ய முடியாமல் குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு தூண்டும் நபர்கள் மீது அரசு அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை. அறுவை சிகிச்சைக்கு போக மறுத்தால் கலெக்டரிடம் கூறி உதவித் தொகையை நிறுத்தி விடுவதாக கூறுகிறார்கள்.

அகதி பெண்களை அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கும் புரோக்கர் அழகம்மா மற்றும் புரோக்கர்களிடமிருந்து எங்களை காப்பாற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்,

ஓர் அகதி

மண்டபமுகாம்

# முடிந்த நூற்றாண்டும் தொடரும் துன்பங்களும்

மேதினம்; வருடம் ஒருமுறை வரும் தீபாவளி பொங்கல், மாரியம்மன், மாதா பண்டிகை போன்று தடபுடலாக ஊர்வலங்களுடன், கொண்டாடப்படுகிறது. கேளிக்கை மிகுந்த நாளாக கொண்டாடப்படுகிறது. காது புளித்த பழைய கோஷங்கள் உணர்ச்சியூட்டும் புதிய கூப்பாடுகள் இவையோடு முடிந்துவிடும் மேமாதம் முதல் நாள்; இதுதான் நாம் அறிந்தது. போடுகின்ற கோஷங்களின் பொருள் கோஷம் போடும் பலரும், கேட்டும் எவருக்கும் தெரியாது, புரியாது.

வரலாற்றிலேயே இந்தத்தினத்துக்கென ஓர் அத்தியாயம் உண்டு. இந்த ஆண்டு அந்த வரலாற்றின் சிறப்பு நிகழ்ச்சியின் நூற்றாண்டு விழா. ஆம். 1886ஆம் ஆண்டு மே திங்கள் முதல் வாரம் சிகாகோ நகரத்தில் சினந்து எழுந்தது. தொழிலாளர் வர்க்கத்திற்கு சினம் எதற்கு? தொழிலாளிக்குகோபம் வரகூடாதே?' உன் எஜமானுக்குவிசுவாசமாக இரு' என்று தானே இயேசுகிறிஸ்துபோதித்தார். இந்த கேள்விகள் எல்லாம் உடைத்தெறியப்பட்டன. ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய எங்களால் இயலாது, எங்களுக்கும் ஓய்வு தேவை, பொழுது போக்கு தேவை என ஆர்த்தெழுந்த பாட்டாளிகள் மீது முதலாளி வர்க்க நலன்களை காக்க அமெரிக்க போலீசார் குண்டு மழை பொழிந்தனர். வீழ்ந்த தொழிலாளர் துவண்டுவிட வில்லை. தங்கள் குருதியில் தோய்ந்து சிவப்பாகிய சட்டைகளை பிடித்து பாட்டாளியின் வெற்றி கொடியாய் காட்டினர். இறுதியில் தொழிலாளர் கோரிக்கைக்கு ஆளும் வர்க்கம் அடிபணிந்தது. எட்டு மணி நேர வேலை சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாய், அமெரிக்காவின் தொழிலாளர் போராட்டம் உலகெங்கும் பரவ தொடங்கியது. பல நாடுகளும் 8 மணி நேர வேலை சட்டத்தை இயற்றியன. இப்போது தெறிகிறதா தொழிலாள நண்பனே (அரசு அலுவலர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நீ மட்டும் பெரிய முதலாளியாக கற்பனை செய்துக் கொள்ளாதே) நீ இன்று எட்டு மணி நேரம் உழைத்து உரிமையோடு 5 மணிக்கு வெளியே வருவதன் காரணத்தை?

1886ஆம் ஆண்டுக்கு முன் ஓர் தொழிலாளி 16 மணிநேரம் ஓர் நாளைக்கு வேலை செய்ய வேண்டும். முதலாளி இஷ்டபட்டபோது சம்பளம் கொடுக்கலாம். இல்லாவிட்டால் சம்பளம் கொடுக்காமல் வெளியேயும் அனுப்பலாம். உழைக்கும்

## 'பிரிட்டோ'

மானுடனே மே தின வெறும் கோஷம் போடும் தினமல்ல. உன் முன்னோன் முதலாளித்துவத்தின் கையில் சிக்குண்டு அழிந்த கதை, அவன் விழிப்புற்று எழுந்த கதை, இன்று நீ வாழும் கதை எல்லாம் இந்த மே தினத்தின் சரித்திரத்தோடு பிணைந்துள்ளது.


தொழிற்புரட்சி நடந்தது: தொழிற்சாலைகள் ஏற்பட்டு நூற்று ஐம்பது ஆண்டுகள் கழிந்து 1886ஆம் ஆண்டு தான் திடீரென்று தொழிலாளிக்கு அறிவு வர வேண்டுமா என்று சிலர் வினவ கூடும். அம்அந்த பாட்டாளி வர்க்கத்திற்கு அறிவூட்ட காரல் மார்க்ஸ் என்ற ஜெர்மானிய தாடிகாரன் வரவேண்டியிருந்தது. உன் உரிமைகளை நீ பெறுவது உன் கடமையென பாட்டாளிக்கு சொல்லி கொடுத்தவர் அவர் தான் முதலாளி வாழ்வது தொழிலாளியால்தானே தவிர, தொழிலாளி வாழ்வது முதலாளியின் தயவில் இல்லையென வெட்ட வெளிச்சமாக காட்டினார் மார்க்ஸ். அவரது உழைப்பின் உபரி மதிப்பு பற்றிய கோட்பாடு(Surplus Value theory of Labour) எவரும் எக்காலமும் மறுப்பு சொல்ல இயலாத ஒரு மதிப்பை உழைப்பவனுக்கு அளித்தது. அவருடைய கோட்பாட்டின், தத்துவத்தின் வெற்றியின் விழாதான் மே முதல் தினம்.

இந்திய தொழிலாளியின் நிலைமையை சற்றே நினைத்து பார்க்கிறேன். இவனுடைய நிலை இவனுக்கு இன்றும் புரியவில்லை என்கிறபோது மனம் வேதனை படுவதை தடுக்க முடியவில்லை. எட்டு மணி நேரம்தான் வேலை செய்தாலும், பதினைந்து மணி நேரத்துக்கான உழைப்பை செலுத்திகொண்டிருக்கிற தொழிலாளர்கள் எத்தனை பேர்? தேயிலை, காப்பி போன்ற தோட்டங்களில் ஒரு நாளையில் இவ்வளவு வேலையை செய்யவேண்டும் என கணக்கு இருக்கிறது. ஒரு ஆள் ஒரு நாளைக்கு 15 கிலோ தேயிலை பறிக்கவேண்டும். இவ்வளவு இரப்பர் மரங்களில் பால் எடுக்க வேண்டும் என்றெல்லாம் கட்டுபாடு விதிக்கப்பட்டு உழைப்பு சுரண்டப்படுகிறது ஆனால் கொடுக்கபடுகின்ற கூலி என்னவோ எட்டு ரூபாய், பத்து ரூபாய் தான். காலையில் எட்டு மணிக்கு வேலைக்கு போய் இரவு பத்து மணிக்குமேல் வீடு திரும்பும் கடைகள், சிறுதொழிற்சாலைகள் முதலியவற்றில் மாத சம்பளம் இருநூறு ரூபாய்க்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

தனியார் பள்ளிகளில் சுயநிதி கல்லூரிகளில் வேலையிலுள்ள ஆசிரியர்கள் பெறும் சம்பளம் ஒரு மாதம். ஒரு வேலை வயிறு கழுவத்தான் சரியாகயிருக்கும். ஆனால் வேலை பளுவோ மற்ற பள்ளிகளை போல் இரண்டு பங்கு. பள்ளி நேரம் முடிந்த பின்னும் நோட்டு புத்தகங்கள் திருத்த வேண்டும், விடைத்தாள்களை திருத்த வேண்டும். பற்றாக் குறைக்கு பள்ளியின் நிர்வாகிக்கு பிறந்த நாள், முதல்வர் முதல்வரான நாள், நிர்வாகியின் வீட்டு நாய் குட்டி போட்ட நாள் போன்ற விழாக்களுக்கு வண்ண தாள்களை வெட்டுவதிலிருந்துஇடுக்கைகளைத் துடைப்பது முதல் அத்தனைவேலையையும்வேறு யாருமில்லை நம் ஆசிரிய தோழர்கள்தான் செய்ய வேண்டும். இவர்கள் கொடுக்கிற ஊதியத்து காலுக்கு பாட்டா காலணி மாட்டு, கழுத்துக்கு டை கட்டி சுருக்கு போட்டு கொள் என்று கட்டுபாடுகள் வேறு; ஒரு கேடு.

நம் பெண் தொழிலாளர்களை நினைத்து பார்க்கிறேன். தேயிலை தோட்டமானாலும், வயல் வெளிகளானாலும் இவர்கள் ஆண்களைவிட இவர்கள் அதிக உழைப்பவைதான் செலுத்துகிறார்கள். ஆனால் கூலி மட்டும்குறைவாகத்தான் பெறுகிறார்கள். நீலகிரியின் தேயி

(14-ம் பக்கம் பார்க்க)



கருத்து படம்:

"மூன்றாம் உலகம் வளர்ச்சியா? நெருக்கடியா?

**உங்களுக்கோர் தகவல்!**

# மருத்துவம் - பொறியியல் படிப்புக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது

தாயகம் திரும்பியோரின் பிள்ளைகள் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரும் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. உங்கள் வசதிக்காகவும்-தெரிந்து கொள்வதற்காகவும் அந்த விளம்பரங்களையும் விபரங்களையும் இங்கு பிரசுரம் செய்கிறோம்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பித் தமிழ் நாட்டில் குடியேறியிருக்கும் தகுதி வாய்ந்தவர் நபர்களிடமிருந்து மற்றும் பொறியியல் (M.B.B.S., B.D S.) படிப்புக்கான இட ஒதுக்கீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் மறுவாழ்வு இயக்குனர், (எழிலகம் சேப்பாக்கம் சென்னை-5) அவர்களால் நேரிலோ தபால் மூலமாகவோ 5—6—86 வரை ஏற்றுக் கொள்ளப்படும். 1986-87க்கான கல்வியாண்டில் பர்மா, இலங்கையிலிருந்து (1964 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ்) தாயகம் திரும்பியவர்கள், வியட்நாம், உகண்டா, சைரே ஆகிய நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் கடந்த 5 வருடங்களுக்குள் குடியேறியவர்கள் மாத்திரம் இட ஒதுக்கீட்டு அடிப்படையில் விண்ணப்பித்துக் கொள்ள தகுதியுடையவர்கள்.

[1] M. B. B. S. / B. D. S. படிப்பு:

மருத்துவ முன்படிப்பு (Pre Medical), இன்டர் மீடியட் சையன்ஸ் (மருத்துவ பிரிவு) தேர்வில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்கள் 50%க்கும் குறையாமல் இருக்க வேண்டும் அல்லது ஆங்கிலம், பௌதிகம், ரசாயனம், உயிரியல் முதலான கட்டாயப்பாடங்கள் கொண்ட சமமான தேர்வொன்றில் தோன்றியிருக்க வேண்டும்.

[II] விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்டிருக்கும் அனைத்து தஸ்தாவேஜூக்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சென்னை-600005யிலுள்ள மறுவாழ்வு இயக்குனர் அலுவலகத்தில் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மேல்நிலைப் பாடத்திட்ட தேர்வுகளில் எழுதுபவர்களும் குறிப்பிட்ட தேதிக்கு முன் விண்ணப்பிக்கலாம். அதைத் தொடர்ந்து தேர்வு முடிவு வெளியான ஒரு வாரத்திற்குள் தேர்வில் பெற்ற பெருபேறுகளையும், பெற்றுள்ள மதிப்பெண்களையும் பற்றிய விவரங்களை சமர்பிக்க வேண்டும்.

இந்த விண்ணப்பம் ஒதுக்கீட்டியுள்ள இடங்களுக்கு மட்டுமே. தவிர சேர்ப்பித்துக் கொள்வதற்கான எந்த உரிமையோ, முறையிடு செய்யவோ இடமில்லை. ஒதுக்கப்பட்டுள்ள இடம், இடத்தின் எண்ணிக்கை, தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரின் யோக்கியாம் த்தை பொறுத்ததாகும். தாயகம் திரும்பியோர் நோடியாக சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு (குறிப்பிட்ட படிவத்தில்) ஒதுக்கீடல்லாத இடங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்வதற்கு தடையேதும் இல்லை.

-மறுவாழ்வு இயக்குனர்

Applications will be received by the Director of Rehabiliation, Ezhilagam Chepauk, Madras-5 from the repatriates from Burma, Sri Lanka (coverd by Indo-Ceylon Agreement, 1964), Uganda. Vietnam, Zaire and new migrants from erstwhile East Pakistan and who are settled in Tamil Nadu, desirous admission against the vacancies that may be reserved by the Government of India for repatrlates in certain Engineering Colleges / Technical Institutions in India for rhe academic year **1986-87 on or** before 21-5-86 furnishing the details.

I. Name
II. Father's Name
III. Postal address
IV. Date of birth
V. Educational qualification
VI. Subjects taken
VII. Marks obtained and persentage in:
Physics
Chemistry
Mathematics
Biology (Botony' Zoology)
(for condidates apply for B. pharma)
VIII. Preference for the branch of Engineering and the College-Insititute in which admission is sought, Choice of the candidates in this regard will be kept in view as far as possible of the candidates is selected for admission,
IX. Category of repatriate/migrant

Signature of the applicant

The canditates are requested to furnish an attested ture copy of the Migration certificate etc, obtained from the appropriate authority testifying about his/her bonafides as a new migrant/repatriate along with attestsd true copies of the Pre-University-Higher Secondary/I.S.C. Certificate and mark sheets, etc.,

Repatriates who are now appearing for the Higher Secondary may also send their application before the last date and follow it up with intimation of results and mark list within a week from the date of publication of results.


The application for allotment of seat against reserved vacancies does not confer any right or claim for admission Repatriates are not also precluded from applying to the Institutions direct (in prescribed forms) against non-reserved seats.

Director of Rehabilitatison

# வெளிச்சத்துக்கு வராத பல கொடைகானல்களுண்டு

கொடைகானல் மலைகளில் தாயகம் திரும்பிய மக்கள் கொத்தடிமையாக தொழில் செய்கிறார்கள் என்ற செய்தி, செய்தி பத்திரிக்கைகள் அனைத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளாக வெளி வந்தன.

இது எப்போதோ வெளிச்சத்திற்கு வெளிவந்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் எத்தனையோ பேர் இந்த பிரச்சனைகளில் முயற்சிகள் எடுத்தும் வெளிவரவில்லை.



**கொடைகானலில் மரப்பட்டை உரிப்பு வேலையில் ஒரு குடும்பமே ஈடுபட்டுள்ளது.**

இப்போது வெளிவந்திருக்கிறதென்றால் அதற்கு காரணம், குர்னிகால் சிங் பிரசாதா என்ற துணிச்சலும், கடமையுமிக்க ஒருவர் கொடைகானலுக்கு துணை கலைக்டராக வந்ததனால்தான்.

அதற்கு துணையாக நின்ற கொடைகானல் இன்டர் நேஷ மாணவர்கள் குழு, கொடைகானல் கல்வி மேம்பாட்டுச் சங்கம் ஆகியவற்றையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டு தாயகம் திரும்பி வந்த மக்களின் வாழ்வுக்கு வழி தேடும் அவலம்-வறுமை-எந்த வேலை கிடைத்தாலும் செய்யலாம் என்ற நிலைதான் இவர்களை கொத்தடிமைகளாக்கி இருக்கிறது.

அன்றைக்கு குறைந்த கூலிக்கு வேலைசெய்ய, வெள்ளையர்கள் கடல்கடந்த நாடுகளுக்கு இவர்களை அழைத்துச் சென்றது போல இன்றைக்கு நாடு திரும்பிய இவர்களை இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் குறைந்த கூலிக்கு அழைத்தாலும் வருவார்கள்-எதைச்சொன்னாலும் நம்புவார்கள் என்ற நிலையில் குறைந்த கூலிக்கு ஆள் என்றால் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் தான் என்ற லேபலே ஒட்டப்பட்டு விட்டது.

இப்படி குறைந்த கூலிக்காக மட்டுமல்ல - கொத்தடிமைகளாக வாழும் நிலை கொடைகானல் மலையில் மட்டும் தானா?

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் நானும் வேறு இரு நண்பர்களும் திண்டுக்கல் அருகிலுள்ள பன்றிமலைக்குச் சென்றோம்.

அங்கும்பல தாயகம் திரும்பியோர் காப்பித் தோட்டங்களில் வேலை செய்து வந்தார்கள்.

அந்த மலையிலுள்ள கூடல் என்ற சின்னஞ்சிறிய நகரில் நாங்கள் சில தாயகம் திரும்பியோர்களைப் பார்த்தபோது அவர்கள் பேசவே பயப்பட்டார்கள்.

“நாங்கள் அயலவர்களிடம் புதிதாக வந்தவர்களிடம், பேசியதை பார்த்தால் எங்களுக்குத் தான் கஷ்டம். எங்கள் முதலாளிகள் அடித்துஉதைப்பார்கள் யாராவது பார்த்தாலும் அப்படியே சொல்லி விடுவார்கள் என்று அச்சப்பட்டுச் சொன்னார்கள்.

அவர்கள் எதையுமே பேச விரும்பாதவர்களாய் அவசர அவசரமாய் சில தகவல்களை மட்டும் சொல்லிவிட்டு போய் விட்டார்கள்.

அப்போது அவர்கள் சொன்ன ஒரு புல்லரிக்கும் சம்பவம்-அந்த சந்தப்புக்கு சில நாட்களுக்கு முன்னால் ஒரு தாயகம் திரும்பிய பெண் ஏதோ தப்பு செய்து விட்டாள் என்று அவளை நிர்வாணமாக்கி கசையால் அடித்தார்களாம் என்பதுதான்.

இப்படி அந்த மலையிலும் கொத்தடிமைகளாக பலர் துன்பத்திற்கும் துயரத்திற்கும் மத்தியில் வாழ்கிறார்கள்.

தாயகம் திரும்பியோர் தமது பூர்வீக கிராமங்களுக்கு வந்து வாழ முடியாதவர்களாக இருக்கிறார்கள். எங்காவது வேலை கிடைத்தாலும் போதும் என்ற நிலையில்வேலைத்தேடி‘மலை’களுக்கு செல்கிறார்கள் - மலைகள் அவர்களுக்கு பழக்கப்பட்ட தட்பவெட்பநிலையிலும் இருப்பதால் செல்கிறார்கள்.

செல்லும் அவர்கள், தமக்கு தெரிந்தவர்களை, உறவினர்களை வேலைத் தேடிக்கொடுக்கும் ஏஜென்டுகளை நம்பியே போகிறார்கள்.

அவர்களின்ஆசைவார்த்தைகளை நம்பிப் போகிறார்கள்.

தமிழ் நாட்டு கிராமங்களிலிருந்து தமிழ் நாட்டு மலைகளுக்கு மட்டும் செல்லவில்லை. கர்னாடகம் போன்ற மாநிலங்களுக்கு காப்பி ஏலம் ஆரஞ்சு, அன்னாசி தோட்டங்களுக்கும் செல்கிறார்கள். “ஆள்கட்டும்” காண்டிரக்டர்கள் மூலமாகவே செல்கின்றனர். இங்கும் அவர்கள் பிடியில் சிக்கி கொத்தடிமைகளாகவே இருக்கிறார்கள்.

ஆகவே, வெளிச்சத்திற்கு வந்தது கொடைகானல் மலை மட்டும்தான். வெளிச்சத்திற்கு வராத பல கொடை, கானல்கள் உண்டு.

**–‘சஞ்சயன்’**



**வேலை, ஓய்வு, உரிய சம்பளம், சலுகைகள் கிடைக்க சட்டங்கள் வழி செய்கின்றன; ஆனால், எதுவும் தானாய் கிடைப்பதில்லை; வேலை நிறுத்தம், உண்ணா விரதம், ஊர்வலம் என்று போராடினால்தான்....**

# கர்னாடக 'பால்மரக்' காட்டு

9-3-86ந் தேதி

நானும் நண்பர் சிவானந்தம் அவர்களும் கர்னாடகம் சுள்ளியா என்ற நகரில் சென்றிறங்கினோம். அங்கிருந்து சோனன் கேரி என்ற இடத்திற்கு போக வேண்டும். நாங்கள் வந்த பஸ்ஸின் சாரதியே ஒரு வண்டியில் ஏற்றி விட்டார்.

'எந்த இடத்தில் இறங்க வேண்டும்? வண்டியில் யாரிடம் கேட்பது?'

அவர்கள் பேசுவது என்னவோ கன்னடமும் துளுவும். எங்களுக்கு இது எதுவும் தெரியாது.

வண்டியில் சிலரை பார்த்த போது அவர்கள் இலங்கையிலிருந்து வந்த தமிழ்மக்கள் போலவே இருந்தார்கள். நடையுடை பாவனை எதுவும் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்களும் பேசுவது கன்னடமும் துளுவும் தான்.

"இருந்தாலும் பரவாயில்லை கேட்டுத்தான் பார்ப்போமே"

தமிழிலேயே கேட்டோம். அவர்கள் தமிழிலேயே தான் பதில் சொன்னார்கள்.

அவர்கள் இலங்கையிலிருந்து வந்த தாயகம் திரும்பியோர்கள் தான். ஆனால் அவர்களுக்கிடையே கன்னடத்திலும் துளுவிலும்தான் பேசினார் - சரளமாக தங்கு தடையில்லாமல் பேசியதுதான் எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"எப்படி இவ்வளவு சாதாரணமாக பேச பழகிக் கொண்டீர்கள்." என்று வினவினோம்.

"வந்த இடத்திலே வாழ்ந்து ஆக வேண்டுமே என்ற துடிப்புதான்"

'அந்த அனுபவங்கள்...நான் கண்ணீர்விட்டு அழுதே விட்டேன்" என்று தன் அனுபவத்தை தெரிவித்தவர் அமிர்தலிங்கம் என்ற நண்பர் - ரப்பர் தோட்ட உத்தியோகத்தவர்; சமூக சேவையாளர்; தொழிற் சங்கவாதி.

இங்குள்ள உள்ளூர்காரர் - உத்தியோகத்தில் இருப்பவர்கள் தலை நிமிர்ந்து நிற்கவும் துணிந்து தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்து நடத்துகிறவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*

1964ஆம் ஆண்டு சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பிவரும் மக்கள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்னாடக மாவட்டங்களில் குடியமர்த்தபடுகிறார்கள்:



ரப்பர் தோட்ட வேலையில்
தாயகம் திரும்பிய பெண் தொழிலாளர்

கர்னாடக மாநிலத்தில் மறுவாழ்வு அளிக்கப்பட்ட உதவிகளில், தக்ஷின கன்னட (தென் கன்னட) மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டதும் ஒன்றாகும்.

தக்ஷிண கன்னட மாவட்டம் கர்னாடக மாநிலத்தில் தென் மேற்கில்-தெற்கே கேரளா மாநிலத்தையும், வடக்கே சிக்கமகளூர், மேற்கே கடலையும், கிழக்கே குடகுமாவடத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இதன் தலைப்பட்டினம் மங்களூர் ஆகும்.

இம்மாவட்டத்தில் கன்னடம் மட்டுமல்ல; துளு பேசுவார், கொங்கணி பேசுவோர், மலையாளிகள் இருக்கிறார்கள். (துளுவுக்கு வரிவடிவம் இல்லை. கன்னட எழுத்தையே பயன்படுத்துகின்றனர்)

நெல், மிளகு, ரப்பர், தென்னை, மா, பலா, வாழை ஆகியவை விளை பொருளாகும் பட்டுப்புழு, தேன் வளர்க்கப்படுகிறது.

ஓடு, பீடி, பாய் முடைதல், மரத்தச்சு போன்ற கைத்தொழில்கள் நடக்கின்றன. சோப்பு மெழுகுவர்த்தி போன்ற குடிசைத் தொழில்களும் நடைபெறுகின்றன.

## ரப்பர்தோட்டங்கள்

தென் கன்னட மாவட்டத்தில் சுள்ளியா, புத்தூர் முதலான வட்டங்கள், மலையும் காடுகளும் நிறைந்தபகுதி. இப்பகுதிகளில் அரசுக்கும், தனியார்களுக்கும்சொந்தமாக ரப்பர் தோட்டங்கள் நிறைய உண்டு.

அரசுக்கு சொந்தமான ரப்பர் தோட்டங்கள், கர்னாடக ஃப்ராஸ்ட் பிளான்டேசன் கார்பரேஷன் லிமிட்டெட்டின் (Karnataka Forest Plantation corporation Limited) என்ற தனிப்பிரிவாக செயல்பட்டு வருகிறது. இது மூன்று டிவிஸன்களாக இயங்கி வருகிறது,

இவற்றின் மொத்த பரப்பளவு 35,000 ஏக்கராகும். இது ரப்பர் பயிரிடுவதற்காக திட்டம். ஆயினும் 4,443.32 ஹெக்டரே ரப்பர் செய்கை செய்யப்பட்டுள்ள அளவாகும்.

இது 1.7.61 ஆரம்பிக்கப்பட்டது. 1981யில் வனத்துறையிடம் இருந்து மேற்படி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## தாயகம் திரும்பியோர் குடியமர்வு

இந்த ரப்பர் தோட்டங்களில் தாயகம் திரும்பியோர் குடிமர்த்தப்பட்டனர். 1. சோனன்கிரி சுளியா, 2. பல்லாரி 3. கில்லாஜா 4. சுப்பிரமணிய புரா ஆகிய இடங்களில் தாயகம் திரும்பியோர் குடிமர்த்தப் பட்டனர்.

மொத்தம் 926 தாயகம்திரும்பியோர் குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப் பட்டுள்ளனர். இந்த தோட்டங்களில் 45 உள்ளூர்வாசி குடும்பங்கள் நிரந்தரமாக குடியமர்த்தப் பட்டுள்ள

# ல்...

னர். ஆக 3055 தொழிலாளர் வேலை செய்கிறார்கள்.

30-4-85 அன்று நடந்த செட்டில் மென்ட்படி, பொது வேலையாளர்களுக்கு தினக் கூலி 11-50 வழங்கப்படுகிறது பால் வெட்டுவோருக்கு ரூபா. 10.50; அனைவருக்கும் இதர படிகளும் வழங்கப்படுகிறது. பிள்ளைகள் காடு வெட்ட ரூபா 9.90 வழங்கப்படுகிறது.

போனஸ் 8.33% 20 நாட்கள் வேலை செய்திருந்தால் ஒரு நாள் சம்பளத்துடன் லீவு உண்டு. மருத்துவ லீவு என்றால் முக்கால் விகிதம் சம்பளம் வழங்கப்படுகிறது. ஹோம் டிராவல் கன்ஸஸன்ஸ் 7 நாட்களுக்கு சம்பளத்துடன் உண்டு.

குடும்பத்திற்கு இருவருக்கு வேலை என்றால் கூட மற்றவர்களுக்கு கேஷுவல் வேலை வழங்கப்பட்டுள்ளது. ஒருகுடும்பத்தில் 4,6 பேர்கூட வேலை செய்கிறார்கள்.

## வீடு-கல்வி வசதி

தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்துத் கொடுக்கப் பட்டுள்ளது. 8X10 அளவில் ஒரு அறை 8X10 ஒரு வராந்தா. சமையல் அறை (இது மலசல கழிப்பிடமாக பயன் படுத்த கட்டப்பட்டது) உண்டு.

மொத்தம் 1264 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 77 வீடுகள் காலியாக இருந்தும் சிலருக்கு இன்னமும் வீடுகள் இல்லை. சுயமாக கட்டிக் கொண்டுள்ளனர். பேக்டரியில் வேலை செய்கிறவர்களில் வீடு இல்லாதவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. மலையில் வேலை செய்யும் வீடு இல்லாதவர்கள் வீட்டுக்காக போராடி வருகின்றனர்.

தமிழ் ஆசிரியர்களாக நாங்கள் நியமிக்கப் பட்டிருக்கிறோம், ஆனால் தமிழ் போதிக்க வகுப்புகள் இல்லை. எப்போதே ஏதோ கிடைத்தநேரங்களை பயன்படுத்திக்கொண்டு கொண்டு அல்லது தாங்களே நேரத்தை வலிய ஏற்படுத்திக் கொண்டு படிப்பிக்கிறோம்!

தமிழ் ''சிலபஸ்'' இல்லை இலவசமான தமிழ் புத்தகம் வழங்குவதும் இல்லை கலைகளிலும் தமிழ் புத்தகம் கிடைப்பதில்லை'' என்று தமிழ் ஆசிரியர்களான நாராயணசாமி, செல்வரத்தினம் ஆகியோர் வருத்தம்தெரிவித்தனர். மேலும் பள்ளிகளிலும், கல்வித் துறையிலும் மேல் மட்டத்தில் இருப்போர் தமிழ் கற்பிக்க ஊக்குவிப் தடையாகவே இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தனர்.

ஆயினும்,

தமிழில் படிக்கும் வாய்ப்பு இல்லாவிட்டாலும் பலர் கன்னடத்தில் படிக்கிறார்கள். கன்னடத்தில் தமது திறமையைக் காட்டி வருகிறார்கள் வகுப்பில் முதலாவது இடத்தில் இவர்கள் இருக்கிறார்கள். படிப்பில் மட்டுமல்ல; போட்டிகளிலும் தனித்தன்மையாக தாயகம் திரும்பியபிள்ளைகள் இருக்கிறார்கள். கட்டுரைப் போட்டி, பேச்சுப்

# 'மயெஸ்ஸார்'

பதில்லை; போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் முதல் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பலர் S.S.L.Cயைக் கடந்து B.A., B.Sc., B.Com. வகுப்புகளிலும் பயில்கிறார்கள். பாலிடெக்னிக்கில் பையன்கள்மட்டுமல்ல; ஒரு பெண்ணும் பயில்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

குடும்பத்தில் அதிக எண்ணிக்கை-வறுமை தாரணமாக பலர் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டனர். சிலர் படிக்காமலே, இலங்கை தேயிலே தோட்டத்தில் இருந்தது போல் 'காடு வெட்டும்' வேலைக்கு செல்கிறார்கள்.



தாயகம் திரும்பிய தொழிலாளி ஒருவர் ரப்பர் மரத்தில் பால் வெட்டில் ஈடுபடுகிறார்

## மருத்துவ வசதி

வைத்திய வசதி திருப்திகரமாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். மருத்துவ செலவை றப்பர் பிளாண்டேசனே ஏற்றுக்கொள்கிறது. வெளியிடங்களில் வைத்தியம் பார்த்தால், அச்சிலவுக்கான ரசீது ஒப்படைக்கப்பட்டாலே பணம் வழங்கும் வசதியை செய்துள்ளது.

## குடும்ப வருமானம்

குடும்பத்தில் ஒரு நபர் வருமானம் மாதம் சராசரி ரூபா 400/- ஆகும்.

இதர வகைகளில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் வழியுண்டு.

ஆடு (50%), மாடு (5%), கோழி (90%), பன்றி (2%) வளர்த்து வருகின்றனர்; இவர்கள் மாதம் சராசரி வருமானம ரூபா 150 ஆகும். இரண்டொருவர் சொந்தமாக நிலம் வாங்கி விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர். பெட்டிக் கடை, சில்லரைக்கடை(2%மானோர்) வைத்து வியாபாரம் செய்கின்றனர். வெளியே பீடி சுற்றுதல், வெல்டிங், பெயிண்டிங், ஆட்டோ ஓட்டுதல், ஸ்பீக்ஸ் செட் வைத்து வாடகைக்கு விடுதல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

தோட்டத்தில் வெற்று இடங்களில் தோட்டம் போடவோ, ஆடு, மாடு வளர்க்கவோ இதுவரை றப்பர் பிளாண்டேசன் நிர்வாகம் எந்த எதிர்ப்பையும் தெரிவித்ததில்லை.

மேற்படி சுயமாகவும், பிறரிடம் கூலிக்கும் வேலை செய்வோர் பலதர வகையான வருமானங்களை பெருகிறார்கள்.

## கல்வி அறிவு

ஆண்களில் 80 சதவிகிதம் பெண்களில் அறுபது சதவிகிதமானோரும் எழுத்து வாசனையுள்ளவர்களாக இருக்கிறார்கள். மொத்தத்தில் 90 சதவிகிதம் பேர் எழுத, வாசிக்கும் அறிவுடையவராக இருக்கின்றனர். 5 சதவிகிதம் பேர் 5 வரை படித்துள்ளனர். 20 சதவிகிதம் பேர் 7வது வரை படித்துள்ளனர்.

## சேமிப்புப் பழக்கம்

சேமிப்பு பழக்கம் பத்து சதவிகிதத்தவர்களிடம் தான் உண்டு. பிளான்டேசன் மூலம் ஈ. பி. எஃப் பிடிக்கப் படுகிறது. எல்.ஐ.சி ஆரம்பிக்கப் பட்டு பிளான்டேசன் மூலம் 8 சதவிகிதம் போடப்படுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

# வரப் பெற்றோம்

## சூரியனோடு பேசுதல்

(கவிதைத்தொகுப்பு)

ஆசிரியர் :
**வ. ஐ. ச. ஜெயபாலன்**

வெளியீடு :

யாழ் பதிப்பகம்,
386, காமராஜர் ரோடு,
கோவை-641 015.

விலை : ரூபா 8/-

...மலைகளில் குறிஞ்சி புல வருடத்துக்கு ஒருமுறை பூக்கும். மருதநிலத்தில் தாமரைகள் சிரிக்கும். சிறப்பாகச் செழித்த பூக்களும் குறை வளர்ச்சியுற்ற பூக்களும் குறிஞ்சிலும் இருக்கும். மருதத்திலும் பூக்கும். இந்த வகையில் தான் நான் இவற்றைப் புரிந்துக் கொள்கிறேன்.....

என முன்னுரையில் சொல்லிக்கொண்டாலும், போர்க்களமாய்-இரத்தமாய் சிவந்துப் போன மண்ணின் அனுபவங்கள் இவரது கவிதைகளில் கலந்திருக்கிறது.

கவிதைகளெல்லாம் ஈழ விடுதலையின் புறம் பாடுகின்றன.

ஏற்கனவே இவர் இலங்கை முஸ்லிம் பற்றி விரிவாக ஆய்ந்திருக்கிறார், மலையக மண்ணிலும் வாழ்ந்திருக்கிறார். அந்த அனுபவ முத்திரைகள் - வடக்கு, கிழக்கு மலையக பிரதேசங்களிலும் விடுதலையின் அகமும் புறமும் பலி கொண்டு போனவர்களின் துயரமும் தோய்ந்திருக்கின்றது.

"திருமணம் ஊர்வலம்
போலவந்த
எழுபத்தொன்றின் வசந்த
காலம்
ஆந்தைகள் அலற
மரண ஊர்வலமாகக்
கழிந்தது.

-நம்பிக்கையோடு வந்த வசந்த காலத்தில் பூக்கள் பூப்பதற்கு பதில் குண்டுகள் வெடிப்பதையும், குயில்கள் பாடுவதற்கு பதில் குருதி பறிக்கும் வேட்டுகள் சத்ததையும் 'வசந்த காலம் 1971' சித்தரிக்கின்றது.

'எங்கள் கிராமங்கள் மண்வளம் மிகுந்தவை எதை புதைத்தாலும் தோப்பாய் நிறையும்" என பிணக்காடாக மாறி வரும்நிலையைச்சொல்லி முடிக்கிறார்.

'உயிர்த்தெழுந்த நாட்க'ளில் இனக்கலவரமொன்றில் அவர் மீண்ட கதையை சித்தரிக்கிறார்.

மீன் பாடும் இசையும், கவியும், வடமோடிகூத்தும், அண்ணாவிகளின் பாட்டும் கலந்தொலிக்கும் மட்டக்களப்பில் ஒன்றாய் வாழ்ந்த தமிழர், முஸ்லிம் மக்கள் தமக்குள் கிண்டைப் பிடிக்கும் சிறுமையை சித்தரிக்கிறார்.

இன்னும் பல கவிதைகளில் ஈழத்து மக்களின் விடுதலை உணர்வையும், சிங்கள அரசின் இனவெறியையும், தமிழர்களின் இறைமை அழிந்த வாழ்வையும் கவிதைகளாக தந்திருக்கிறார்.

வேதனைத்தொனிக்கும் கவிதைகள்,

"ஒருநாள் மானுடம்
விழிக்கும்,
எல்லோர் கைகளின்
விலங்கும் தகரும்..."

என்று எதிர்கால நம்பிக்கையையும் ஊட்டுகின்றன.

## கறுப்புச் சூரியன்

(ஆபிரிக்க விடுதலைக்
கவிதைகள்)

வெளியீடு :
யாழ் பதிப்பகம்
கோவை-641 015.
விலை : ரூபா 3/-

போராடும் ஆபிக்க மக்கள் கவிஞர்களின் படைப்புகள் இவை. அங்கோலா, மொசாம்பிக், ஜிம்பாப்வே, சினி பிஸ்ஸாவு கேப்வேடி, தென்னாப்பிரிக்க கருப்பின மக்களின் விடுதலைக் கவிதைகள் இவை.

சமீபத்தில் தூக்கிலிடப்பட்ட பெஞ்சமின் மொலாய்ஸ் முதல் ஆப்பிரிக்கக் கவிஞர்களின் படைப்புகளின் மொழிபெயர்ப்பு கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

O

## புதுவாழ்வு பிறக்கிறது

(மாத இதழ்)
42, ஆலமரத்தெரு,
கரூர்-639 001.

கதை, கட்டுரை, துணுக்குகள் தாங்கி வெளிவருகிறது.

O

## 'சுட்டும் விழிச்சுடர்'

(மாத இதழ்)

முகவரி :

108, அகமது காலனி,
ராமலிங்க நகர்,
திருச்சி-620 003.

இன்றைய கலை, இலக்கியம் சமூக, அரசியலை விமர்சிக்கும் ஏடு.

O

இசைப்பாடல்

## கிளர்ந்தெழுவோம் பாட்டாளிகளே!

**-குறிஞ்சி தென்னவன், இலங்கை-**

புரட்சி மலர்கள் பூக்கவே....!
பொதுமைக் கருத்துக்கள் மலரவே!
உழைக்கும் மக்கள் உயர்ந்து எழுவோம்
உலகம் செழிப்பில் ஓங்கவே!
—புரட்சி மலர்

விடுதலை யேநம் நோக்கம்
வெற்றித் தானெம் ஆக்கம்
கெடுதலை புரிவார் இடும்தளை ஒடித்தே
கிளர்ந்தெழு வோம்பாட் டாளிகளே!
—புரட்சி மலர்

உலகம் எவர்க்கும் பொதுவாம் - வாழும்
உரிமை எவர்க்கும் பொதுவாம்
தனியொரு மனிதன் சுகம்பெற பலபேர்
சகத்தில் வாடும் நிலையை மாற்றுவோம்
புரட்சிமலர்

உழைப்பைச் சுரண்டி வாழ்வோர்-எம்
உரிமை மறுக்கும் ஆள்வோர்
இழைக்கும் கொடுமை எதையும் தாங்கி
எழுவோம் பொதுமைச் சோலை காணவே
—புரட்சி மலர்கள்

சாதி சமயம் காட்டி—எமைத்
தாழ்வென பேசும் தீயர்
ஓதும் பொய்மை நீதிக் கதைகள்
எவையும் தூக்கி எறிந்தே எழுவோம்
—புரட்சி மலர்கள்

## விவாதக் கட்டுரை :

# தீர்வுக்கு வழிமுறை எது!

க. இராமசாமி

'சென்னையில் தொண்டைமான்' என்ற 'பிறைசூடி'யின் கட்டுரைத் தொடர்பாக கீழ் காணும் தலைப்புகளில் விவாதக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

1, இன்றையத் தேவை என்ன? (கணபதி)

2. மலையக மக்கள் நிலை பெற தனித்துவமான நிலைப்பாடு காணவேண்டும். (காமினி சால்வடோர்)

3. மலையக மக்களும் ஈழ விடுதலைப் போராட்டமும் [பிறை சூடி]

விவாதத் தொடர்பான இக் கட்டுரைகளின் மீதான என் கருத்துக்களை இங்கு குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## விவாத கட்டுரைகளின் சாராம்சம்

'சென்னையில் தொண்டமான்' என்ற கட்டுரையின் நோக்கம் தொண்டமானின் அரசியல் ஊசலாட்டங்களை அம்பலப்படுத்துவதாகும், அதன் மையக் கருத்து மலையக மக்களின் விடுதலை பற்றியதாகும். அதன் தீர்வு பிரிக்க முடியாதவாறு மலையக மக்களின் பிரச்சினை (விடுதலை)கள் ஈழ மக்கள் பிரச்சினையுடன் ஒன்றிணைந்து விட்டன. ஆகவே அந்த ஒன்றிணைவின் முழுமையில்தான் தீர்வும் அடங்கியுள்ளது.

இரண்டாவதாக வெளிவந்த இன்றைய தேவை என்ன என்ற கட்டுரையின் சாராம்சம் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு இனவாதம் அல்ல தீர்வு; தற்போது அம்மக்களின் பிரச்சினையே பாதுகாப்பின் பக்கம் தான் உள்ளது. என்பதாகும். அதே நேரத்தில் மலையக மக்கள் யார்? தேசிய இனமா,? என்ற கேள்வியை எழுப்பி ஆய்வுக்கு விடப்படப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அது முன் வைத்திருக்கிறது.

மூன்றாவது கட்டுரையின் சாராம்சம் ஈழ விடுதலை என்பது இம்மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக முடியாது. மாறாக மலையக மக்கள் விடுதலை அம்மக்களின் கையில் இருக்கிறது என்பதை உணர்த்துவதாகும்.

இக்கட்டுரைக்குள் மறைந்து கிடைக்கும் இன்னும் ஒரு முக்கிய கருத்தும் உண்டு. அவர்கள் (மலைபகமக்கள்) வாழும் இடம் சிங்கள பிரதேசமாகும். அது ஒருநாளும் ஈழம் என்ற எல்லைக்குள் செல்லாது. அதே நேரத்தில் இம்மக்களின் விடுதலையானது இலங்கையின் ஒட்டு மொத்த விடுதலையுடன் இணைக்கப்பட்ட ஒன்று என்பதாகும்.

3வது கட்டுரையின் நோக்கம் 2-வது கட்ரையாளருக்கு பதிலளிப்பதும், தமது விவாதத்தை நெறிபடுத்துவதுமாக இருந்தது. இதில் தமிழ் ஈழப் போராடம் என்பது இனவாதம்அல்ல; மாறாக அது தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பதே சாராம்சமாக இருந்தது. மறுபுறத்தில் மலையக மக்களிடம் தற்போது இனவுணர்வே மேலோங்கியுள்ளது; இலங்கையில் வர்க்க ஒற்றுமை இல்லாதஒன்றாகிவிட்டது அது கற்பனையானது என்ற கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கருத்துக்களை முன் வைத்துள்ளது மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களின்விமோசனத்திற்கு இந்தியாவே உத்தரவாதம் என்ற கருத்தை (இக் கருத்து இலங்கையில் அனைத்து மக்களும், இந்தியாவில் 'முற்போக்கு இடது சக்திகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியு ஒன்று)போகிற போக்கில் முன் வைத்துள்ளது. இவ்விதத்தில் இக்கட்டுரை மிக முக்கிய பங்கு ஆற்றியுள்ளது.

## கட்டுரையில் காணப்படும் அடிப்படைத் தவறுகள்

நாம் இவ்விவாதத்தை மலையக மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்திலேயே நடத்துகிறோம், ஆகவே நமது விவாதம் பிரச்சினையை முன் வைத்தல் தீர்வு காணுதல் தல் (வழிமுறை வகுத்தல்) என்ற இரண்டு அம்சங்களையும் உட்கொண்டதாகும். இதில் முதலாவது அம்சத்தை விட்டு இரண்டாவது அம்சத்தை நோக்கி முன்னேற முடியாது. அல்லது 2வது அம்சத்தை தவிர்த்துவிட்டு முதல் அம்சத்திலேயே நின்று கொண்டால் விவாத மேடை என்பது சாராம்சம் இழந்து நிற்கும்.

ஆகவே இந்த இரண்டையும் கவனத்தில் கொண்டு சிறந்த விவாதத்தை நடத்துவதற்காக இக்கட்டுரையில் மையக் கருத்தையும், அதன் உபகருத்துக்களையும் கவனத்தில் எடுத்துள்ளேன். அவ்விதம் கவனித்த போது வெளிவந்துள்ள நான்கு கட்டுரைகளிலும் வெளிப்படுத்தப்பட்டதை நான் தவறு என கருதும் கருத்துக்களை முதலில் வசதிக்காக (விவாதத்தில் எனது வசதிக்காக) முன்வைத்து எனது கருத்துக்களை அடுத்த பகுதியில் விமர்ச்சிக்கிறேன்.

1. தமிழ்மக்களின் போர்ராட்டத்தை 'இனவாதம்' என்று முடிவுக்கு வருதல்.

2. பூர்வீக தமிழ் மக்களினதும், மலையக மக்களினதும் போராட்டம் ஒன்றாக இணைந்து விட்டன எனக்கூறுதல்.

3. தற்போதைய பிரச்னை பாதுகாப்பு பற்றிய மட்டும் எனல்.

4. இலங்கை தமிழர்களில் விமோசனத்திற்கு இந்தியாவே உத்தரவாதம் எனல்.

5. வர்க்க ஒற்றுமை இல்லை என்று முடிவுக்கு வருதல்.

6. மலையக மக்கள் வாழும் இடத்தை சிங்கள பிரதேசம் எனக் கூறுதல்.

7. மலையக மக்களின் விடுதலை அம்மக்களின் கையில் தான் இருக்கிறது என்றுகூறல்.

தமிழ் மக்களின் போராட்டம் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதினால் எழுந்த ஒன்றாகும். இதனை பிறைசூடி விளக்கியுள்ளார். ஆனால் இன்று சில இடது சக்திகள், முற்போக்காளர் எனப் படுவோர், தேசிய இனச்சிக்களையும், சமூக வர்க்கங்களின் பிரச்சினைகளையும் பிரித்தறிய முடியாத காரணத்தினால், சமூக வர்க்கங்களின் பிரச்சினையை மட்டும் கணக்கில் கொண்டு, தேசிய இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கான அனைத்துப் போராட்டங்களையும் 'இனவாதம்' என்று முத்திரை இட்டு ஒதுக்குகின்றனர். இது ஒரு தவறான ஒரு வரட்டுவாத கண்ணோட்டமாகும். இந்த கண்ணோட்டத்திலிருந்துதான் கணபதியின் கட்டுரை வெளிப்பட்டுள்ளது.

இன்றைய இலங்கையின் தேசிய இனச்சிக்கல் என்பது சமூக வர்க்கங்களின் பிரச்சினையாகவும் உள்ளது. இலங்கையின் ஆளும் வர்க்கமாக சார்பு நிலை முதலாளித்துவம், தனது இருப்பை தொடர்ந்தும் நீடிக்க, சமூகத்தின் புரட்சிகர

(12-ம் பக்கம் பார்க்க)

11-ம் பக்கத் தொடர்ச்சி....

வர்க்கங்கள் இன அடிப்படையில் பிரித்து (தமிழர் சிங்களவர்) தனித்தனியே நிறுத்தி மோதவிட்டுள்ளது. பெரும்பான்மை இனமான சிங்கள இனத்தின் பாதுகாவலாக தன்னைக் காட்டிக் கொள்கிறது. மறுபக்கத்தில் தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறையை (உரிமைகளைப் பறித்தல், சித்திரவதை செய்தல், கொள்ளை கொலை ஆகியவற்றில் ஈடுபடல்) கட்டவிழ்த்துள்ளது. இங்கே இது இனப் பிரச்சினையாக வெளிப்படுத்தப்படுகின்றது. இப்படி செய்வதன் ஊடாக ஆளும் வர்க்கம் தன்னை அடக்கி ஒடுக்கப்பட்ட சமூக வர்க்கங்களின் போராட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்கிறது. ஆக மொத்தத்தில் வளர்ந்து வரும் சமூக மாற்றத்திற்கான சக்திகளை இல்லாதொழிப்பதே அரசியல் உள் நோக்கமாகும், இதனை இனம் கண்டுகொள்ளாத எவரும் சரியான கருத்துக்களின் பக்கம் வருவது கடினமாகும்.

இன்றைய தமிழ் மக்கள் இன ரீதியாக அடக்கப்படுகின்றனர். இதன் அர்த்தம் வர்க்க ரீதியாக அடக்குமுறை இல்லை என்பதல்ல. அடக்கும் இனத்தில் ஆளும் வர்க்கங்களின் கண்ணோட்டத்தை அவ்வடக்கும் இனத்தின் ஆளப்படும் வர்க்கங்களும் பின்பற்றி நிற்கின்றன என்பது உண்மைதான். அந்த ஆளப்படும் வர்க்கங்களின் வர்க்க உணர்வுகள் தேசிய இன கண்ணோட்டத்தால் வீரமூட்டப்பட்டு, தம் சுயம் இழந்து உள்ளன இங்கே சிங்கள இனத்தின் புரட்சிகர சமூக வர்க்கங்களின் மனோ நிலையில், மேலோங்கிய உணர்வுகளாக முதலாளித்துவ உணர்வுகளே பதிந்து போயுள்ளன இது வரலாற்று இயக்கப்போக்கின் ஒரு விளைவாக பார்க்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அவர்களின் வர்க்க உணர்வுகள் உப உணர்வுகளாக (Un concios ness) கிடக்கின்றன. அவையே அவர்களின் உண்மையான உணர்வுகளாகும். இதனை இல்லை என்று அல்லது கற்பனை என்றுரைப்பது (பிறை சூடியின் கூற்று) சமூக வர்க்கங்களின் உணர்வுகளின் எதார்த்தத்தை மறுத்துரைப்பதும், வரலாற்று இயக்கப் போக்கை காணத் தவிர்ப்பதுமாகும். அது தொடர்பாக வர்க்க ஒற்றுமை என்பது சாத்தியப் படக் கூடிய ஒன்றே என்பதை நிகழ்கால உண்மையென தோற்றங்காட்டும், நிகழும் பொய்த் தோற்றங்களாகப் போகக்கூடிய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் கொண்டு போய் நிறுத்துவது மட்டுமல்ல, தவறான முடிவுகளுக்கு பிறைசூடி போன்றவர்களை நகர்த்திச்செல்கிறது.

ஆகவே, 1வதும், 5வதுமான இரண்டு கருத்துக்களும் நடைமுறையை பிரித்தறிய முடியாததனின் விளைவாக எழுந்த தவறுகளாகும் என்று நான் கருதுகிறேன்.

2.வது கருத்து என்பது பூர்வீக தமிழர்களினாலும் மலையக மக்களினாலும் போராட்டம் ஒன்றாக இணைந்து விட்டன. என்றுகூறுவதாவது தற்போது இவ்விரு பிரிவினரும் (மொழியால் ஒன்றானவர்) தத்தமது தனித்துவங்களையும், பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஐக்கிய பட்டது போன்ற நிலையில் கூறப்பட்டுள்ளது. அது யதார்தமாக முடியாது. மாறாக இவ்விரு அணியினரும் மேலாதிக்க சிங்கள இனவாதத்திற்கு முகம் கொடுத்தல் என்ற அர்த்தத்தில் வரலாறு மறைமுக கருவியாக இருந்து ஒரு ஐக்கிய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. என்பது உண்மையே ஆனால் இதே வரலாற்று கருவி இவர்களை இன தனித்துவங்களையும், பொருளாதார வளங்களில் பங்கேற்புச் செய்யும் போதும், அதிகார நுகர்வு கொள்ளும் போதும் மீண்டும் தலைதூக்கி செயல்படும் என்பதும் யதார்த்தமாகும். இந்த இரு பிரிவினரையும் ஒப்பு நோக்குகையில் பூர்வீக தமிழர்கள் கல்வி, கலாச்சார, பொருளியல் வாழ்க்கை, பிரதேசம் என்பவற்றில் முன்னேறியவர்களாக உள்ளனர் பாரம்பரிய பிரதேசம் என்ற ஒன்றை கொண்டவர்களாகவும் உள்ளனர் மலையகமக்கள் பின்தங்கிய பிரிவினராக உள்ள அதே வேளையில் தமக்கென பிரதேச உரிமை அற்றவர்களாக உள்ளனர். ஒரு வேளை மலை நாட்டின் ஒரு பகுதியை அவர்கள் தமிழ் ஈழத்துடன் இணைத்தால் அவர்கள் நடைமுறையில் அதிகார நுகர்வு பெறவும். பொருளியல் வாழ்வில் பங்கு பெறவும் வாய்ப்புண்டு. இல்லையெனில் ஒதுக்கித் தள்ளப்படுவர். இதனால் தானோ என்னவோ சில ஈழ விடுதலைக் குழுக்கள் மலையக மக்களின் பிரதேசம் ஒன்றை இலங்கை வரை படத்தில் உருவாக்கியுள்ளனர். இது சீதனத்துடன் பெண்எடுப்பது போன்றதாகும்.

ஆகவே 2வது கருத்தில் அரை உண்மை உள்ளது என்று ஒத்துக் கொண்டாலும் இரண்டு பிரிவினரின் உளப் பூர்வமான ஒன்றிணையல்ல இது. மாறாக வரலாற்று நிர்ப்பந்தம் என்றே கூற வேண்டும் மறைமுகமாக தமிழ் தேசிய இன விஸ்தரிப்புக்கான கருத்தோட்டமாக பயன் படுத்தக் கூடிய ஒன்றாகவும் இஃதுள்ளது ஆகவே இக்கருத்தானது தெளிவின்மையின் வெளிப்பாடாகும். •

இக்கருத்துடன் விமர்சிக்க வேண்டியது 6வது கருத்துமாகும். மலையக மக்கள் வாழுகின்ற பகுதியானது சிங்கள பிரதேசமாகும். அது எவ்விதத்திலும் ஈழத்துடன் இணைக்கப் பட முடியாது. அவ்வாறெனில் மலையக மக்களுக்கு பிரதேசமே இல்லை என்றாகிறது. இக்கருத்து மறைமுகமாக சிங்கள பெருந்தேசிய இனத்தின் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கிறது. நண்பர் காமினி சர்வடோர் இக்கருத்துக்கு வந்திருப்பது அவரை அறிந்து வந்ததா? அல்லது மறைமுக உணர்வின் 'un censiosness) வெளிப்பாடா? பெரும்பாலான நேரங்களில் மறைமுக உணர்வுகளே உண்மை உணர்வுகளாகும். இஃது உளவியல்கணிப்பு

மலையக மக்களுக்கு என்று பிரதேசம் இல்லை என்றால் நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ அவர்களின் விடுதலை அவர்களின் கையில் தான் இருக்கிறது (கருத்து 7வது) என்பதன் அர்த்தம் என்ன? சிங்கள மக்களிடமிருந்து ஒரு பிரதேசத்தை அறிந்து பெற்றுக் கொள்வதா? அல்லது தாம் இருக்கும் பிரதேசத்தை தங்களுடையது என்று பறைசாற்றி போரிடுவதா? எந்த வழிமுறையை பின்பற்றலாம்! சோஷலிசம் என்ற முறையை பின்பற்றலாமா? அது தீர்த்துவிடுமா? (இன்று சகலதிற்கும் சோசலிசமே தீர்வு என்பது முற்போக்கானவர்கள் கூறும் சுலுவான தீர்வாகும், இதனை ஆய்வில்லாமலும் யாரும் கூறும் அளவுக்கு பிரசித்தம் பெற்றுள்ளது)

மலையக மக்களுக்கான பிரதேசம் எது என்பது குறித்த

(13-ம் பக்கம் பார்க்க)

# மேதினச் சிந்தனை



எட்டுமணி நேரவேலை; வேலைக்குரிய கூலி-என் என்பதெல்லாம் சட்டப்படி தொழிலாளர்களுக்கு உண்டுஎன்றாலும், பெரும்பாலான தொழிலாளர் வேலைப்பளு, உரிய சம் சம்பளமின்மை என்ற நிலையில்தான் வாடுகின்றனர்; அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களே அவர்களுக்கு அன்னியமான ஒன்றாகி விட்டது. அரிசியாகட்டும், பருப்பாகட்டும், தேயிலையாகட்டும், காப்பியாகட்டும் எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு கிட்டாத பொருளாக குதிரைக் கொம்பாக-குதிரை விலைக்கும் கிடைப்பதில்லை ....... கிடைப்பதென்னவோ பசியும் பிணியும்தான்...

# மேதினச் சிந்தனைகள்

இவ்வருட மேதினம் நூற்றாண்டு மேதினம். தொழிலாளர் வர்க்கம் எட்டுமணி நேர வேலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்ததைக் கொண்டாடிய நாள். 100 வருடங்களாக மேதினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினத்தில் நமது எண்ணமெல்லாம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றியே முழுமையாக ஆகர்ஷிக்கப்பட்டுள்ளது.

1948ல் எத்தனை பெருமிதமாக எத்தனை நம்பிக்கையோடு சுதந்திர இலங்கையில தனது சுய ரூபத்தைக் காட்ட முனைந்த தொழிலாளர் வர்க்கம், இன்று சிதறி சின்னாபின்னப்பட்டு ஜயவர்த்தனாவின் சாகசப்பிடியில் சிக்கி மேதின மேடையில் முதலாளித்வக்கூத்தாடிகளான இந்திப் பாடகர்களின் கேளிக்கைகளைக்காண கூடிக்கலையும் கூட்டமாக மாறியிருக்கிற பரிதாப நிலையைக் காண்கிறோம்.

1948ல் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் குடி உரிமையைப் பறித்து முதலாளித்துவத்தின் கொடியேற்றினார் டி. எஸ். சேன நாயகா, அன்றே தமிழ்-சிங்கள இனப் போராட்டத்திற்கும், தொழிலாளர் ஒற்றுமையை அழிக்கும் திட்டத்திற்கும், இந்திய விரோதக் கோட்பாட்டிற்கும், ஏகாதிபத்தியத்தின் நவ-காலனித்துவ வளர்ச்சிக்கும் அடிக்கல் நாட்டினார். சேன நாயகா அன்று அவரது அரசியல் ஏவலராக இருந்த நவ-காலனித்துவ சிற்பி ஜயவர்த்தனா இன்று இலங்கையில் ஏக சர்வாதிகாரியாக கோலோச்சி நிற்கிறார். சேன நாயகா இட்ட வித்துக்கள் இன்று பெரும்மரங்களாய் வீறிட்டு வளர்ந்திருக்கின்றன.

1. இனக்கலவரத்தின் உச்ச நிலை.

2. தொழிற் சங்கங்களின் ஒற்றுமையும் செயற்பாடும் சீர் குலைந்துள்ள நிலை.

3. இந்திய விரோதக்கோட்பாட்டின் பூரணத்துவம்.

4. மலையகத் தொழிலாளர்கள் தொண்டமான் தலைமையில் ஜயவர்த்தனா மந்திரிசபையால் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

5. அமெரிக்க ஏகாதிபத்திய தொடர்புகள் இலங்கையை இறுகப் பற்றியுள்ளன.

6. முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாடுகளும், செயற்பாடுகளும் ஊட்டம் பெற்று வளர்ந்துள்ளன,

பண்டார நாயகா வந்தார், போனார்; ஸ்ரீமா வந்தார், போனார். என். எம். பெரேரா பிலிப் குணவர்த்தனா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன், பெர்னாட் சொய்சார் ஆகியோர் காபினெட்டுக்குள் நுழைந்து தவழ்ந்து, வெளியேறி விட்டார்கள். இலங்கையில் தொழிலாளர்கள் தொடர்ந்து தோற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

1. என். எம் மின் எண்ணற்ற வேலை நிறுத்தப் போராட்டங்கள்.

2. வங்கி ஊழியர்களின் போராட்டங்கள்.

3. பொது ஊழியர்களின் வேலை நிறுத்தம்.

4. ரோகனாவின் இளைஞர் கிளர்ச்சி.

5 இன்று தாதிகளின் வேலை நிறுத்தம்.

தொடர்ந்து தோல்விகள்! தொடர்ந்து தொழிற்சங்கப் பிளவுகள்! இனவாத அரசியல்! ஏகாதிபத்திய சுரண்டல்பொருளாதாரம். இதுதான் எனது இன்றைய நவ இலங்கை.

வடக்கிலும். கிழக்கிலும்
இராணுவேட்டை

தியாக குருதி மண்ணைச்
சிவப்பாக்கி விட்டது

சோசலிசம் சொல்லுக்குக்
குறைவில்லை

விடுதலையும், வெற்றி
யையும் காணோம்

மலையகத்து மண்ணில் மட்டும்,

சில மின்னல் வெற்றிகள்—

1. நாடற்றோருக்கு குடி உரிமைச் சட்டம்.

2. சம்பளப் போராட்டத்தில் வெற்றி.

3. இனக்கலவரத்துக்கு விரைந்து முற்றுப்புள்ளி.

என்றாலும் இருளகலவில்லை.

அடுத்த மேதினத்திற்குள்,

கீழ்வானம் சிவக்குமா?

செம்பரிதி உதிக்குமா?

இதுதான் இன்றைய மேதினத்தில் எம்மை அலைக்கழிக்கும் கேள்வி.

இலங்கையில் வர்க்க வெற்றிக்கோ, இன வெற்றிக்கோ திறவுகோல் வைத்திருப்பவர்கள். மலையகத் தொழிலாளர் மக்கள் மட்டுமே. அவர்கள் தமிழர்களில் ஏறக்குறைய சரிபாதி. தொழிலாளர்களுக்கிடையே மூன்றிலொரு பங்கு. பொருளாதாரத்தின் முதுகெலும்பு. மலையகத் தொழிலாளர்கள் நிமிரும் வரை இலங்கைத் தொழிலாளர்கள் நிமிர முடியாது. மலையகத் தொழிலாளர்களின் சக்தியை மழுங்க வைத்து, அவர்களது தொழிலாளர் தன்மையை ஒழித்து, அவர்களை 'இந்தியர்கள்' என்றும் 'தமிழர்கள்' என்றும் சிங்கள மக்களிடையே பூச்சாண்டி காட்டி, இலங்கையில் எப்பொழுதோ மலரவிருந்த சோசலிசச் சிவப்பு ரோஜாவைக் கருக வைத்த பெருமை முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கு உண்டு. கருக வைத்தவர்களைக் கருக வைக்க இந்த மேதினத்திலாவது இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் சங்கற்பம் பூணுமா? O

'பிறைசூடி'

## இலங்கை எழுத்தாளர் டானியல் மறைவு

பிரபல இலங்கை எழுத்தாளர் திரு. கே. டானியல் காலமானார். நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்டிருந்த இவர் 23-3-86 அன்று உயிர் துறந்தார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன அமைப்பின் அமைப்பாளராக இருந்து தீண்டாமையை ஒழிக்க பாடுபட்ட இவர் தீண்டாமையை மையப்படுத்தி எழுதிய நாவல் பஞ்சமர். முற்போக்கு எழுத்தாளரான இவர் பல கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் படைத்துள்ளார்.

கும்பகோணத்தில் காலமான இவருக்கு கும்பகோணத்திலே இறுதி மரியாதை செய்யப்பட்டது.

## உங்கள் கவனத்திற்கு

கட்டுரைகள்
செய்திகள்
மற்றும்
விடயங்கள்
கடிதங்கள்

அனைத்தும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம் :-

**மக்கள் மறுவாழ்வு**
**த. பை. எண் : 5560**
**சென்னை-600 094.**

# மக்கள் மறுவாழ்வு

## 5-வது ஆண்டு மலர்

இலங்கை பர்மா வியட்நாம் முதலில் நாடுகளிலி லிருந்து தாயகம் திரும்பிவிட்ட-திரும்பிக் கொண்டிருக் கிற லட்சோப லட்ச மக்களின் நலனுக்காக, அரசியல் கட்சி அமைப்புகள் எதுவும் சார்பற்ற நிலையில் வெளி வரும் ஒரே ஏடு **'மக்கள் மறுவாழ்வு'**

தாயகம் திரும்பிய மக்களுக்கு **மக்கள் மறுவாழ்வு** ஒரு சிறந்தவழிகாட்டியாக திகழ்கிறது. தமிழகத்திலும் பிறமாநிலங்கலும் குடியேறி தமது வாழ்வை அமைத்து வரும் தாயகம் திரும்பியோருக்கு அரசு அளித்துவரும் உரிமைகளையும் உதவிகளையும் சலுகைகளையும் வெளியிட்டு வருகிறது. குறைகளையும் சுட்டிக்காட்டி வருகிறது. மறுவாழ்வு அமைக்கும் அவருக்கு இப் புதிய நாட்டின் சமூக, பொருளாதார, கலை, கலாச் சார அரசியல் பிரச்சனைகளை விளக்கி, வாழும் வழி வகைகளை எடுத்துக்கூறி வருகிறது.

இந்த பணிகளை சீரும் சிறப்புற செய்து கடந்த ஐந்து ஆண்டாக **மக்கள் மறுவாழ்வு** வெற்றி நடை போட்டு வருகிறது.

**மக்கள் மறுவாழ்வு** தனது ஐந்தாவது ஆண்டில் சிறப்பு மலலொன்றை வெளியிட இருக்கிறது.

இலங்கை மலையகத் தமிழ் மக்களின் வரலாறு, வாழ்க் கை, அரசியல், சமூக, கலை, கலாச்சாரப்பற்றியும், இலங் கைப்பிரச்சனையில் மலையகத்தமிழர்களின் நிலைப்பாடு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் தாயகம் திரும்பிவிட்ட மக்களின் வாழ்க்கை, பிரச்சனைகள் — முதலாக மலை யகத்தமிழர்கள் பற்றிய அனைத்து விபரங்களையும் தாங் கிவரும் இதழாக இம் மலர் மலர இருக்கும்.

மலையக மக்கள் கதைக் கூறும் கதை, கட்டுரை, கவிதை தாங்கி என்றும் பாதுகாத்து வைக்கத்தக்க புதையலாக இம்மலர் வெளிவர இருக்கிறது.

சமூக நலனுக்காக வெளிவரும் **மக்கள் மறுவாழ்வு** 'மக்கள் மறுவாழ்வு ஐந்தாவது ஆண்டுமலர் சிறப்புற வெளிவர மேலான விளம்பரங்களை அளித்து ஆதரவு நல்கி' வேண்டுகிறோம்.

விபரங்களுக்கு :

**மக்கள் மறுவாழ்வு**

1, தெற்கு கங்கை அம்மன் கோயில் 2வது தெரு,
(த. பை. எண் : 5560)
சென்னை-600 094.


## தீர்வுக்கு...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரை (மலை அரசி எழுதி யது) ஏற்கனவே 'மக்கள் மறு வாழ்வில்' வந்துள்ளதால் அதனை நான் ஏற்பதால் அத னைப் பற்றி இங்கு தவிர்க்கி றேன்.

3வது கருத்தும், 4வது கருத் தும் தற்போதைய இலங்கை யில் தேசிய இனச்சிக்கல் குறித்த கணிப்பீடும், தீர்வுமாக உள்ளது. இதில் 3வது கருத்து மலையக மக்களின் பிரச்சினை யை வெறும் 'பாதுகாப்பு' வட் டத்திற்குள் கொண்டு நிறுத்திப் பார்க்கிறது. அதனுடைய விடு தலை பற்றி அது கருத்து தெரி விக்க அஞ்சுவதை உட்கொண் டுள்ளது. ஏனெனில் கணபதி தமிழ் மக்களின் பிரச்சினையை 'இனவாதம்' என்று பார்க்கின் றதின் விளைவாக உள்ளது.

மலையக மக்கள் தேசிய இன சிக்கலிலிருந்து தம்மை விடு விக்க வேண்டுமெனில் தற்பாது காப்பு மட்டுமல்ல, தாக்குதலும் என்ற இரு நடவடிக்கைகளி லும் ஈடுபட்டாக வேண்டும். ஆகவே 'தற்பாதுகாப்பு' என்று மட்டும் பார்ப்பது ஒரு முனை யைப் பார்த்து மறுமுனையை அதிலிருந்து பிரிப்பதாக உள்ள தால் அக்கருத்து தவறான ஒன் றாகும்,

4வது கருத்து அந்நிய தலை யீட்டை அங்கீகரிக்கிற ஒன்றா கவும், அதே நேரத்தில் இலங் கையின் புரட்சிகர சமூக வர்க் கங்களின் மீதும், அடக்கி ஒடுக் கப்பட்ட இலங்கையின் மீதும் அவநம்பிக்கையை ஏற்படுத்து வதாகவும் உள்ளது. அதுமாத் திரமல்ல ஒரு யுத்தத்திற்கு வழி கோறுகின்ற விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவும் உள் ளது இக்கருத்து பற்றிய ஆழ மாக விமர்சித்ததை வைப்பது எனின் இலங்கையில் தேசிய இனச்சிக்களின் முழுமையை பார்க்காமல் முடியாது. ஏனெ னில் ஒருநாடு இனனொரு நாட் டின்பிரச்சினைகளில் எப்போது தலையிடலாம்? என்ற கோட் பாடு முடிவுக்கு வந்தாக வேண் டியுள்ளது. ஆகவே அந்த கோட்பாடு அவசியமெனில் அதனை தனியான விவாதத் திற்கு நான் விட்டுச் செல்கி றேன். O

மேலே முன் வைத்துள்ள என் விமர்ச்சனமானது கட்டு ரையின் அடிப்படையானதவறு களை மட்டுமே வெளிப்படுத்து வதாக உள்ளது. மொத்தத்தில் கணபதியின் கட்டுரையில் பிற் பகுதியில்குறிப்பிட்டுள்ள 'மலை யக மக்கள் யார்?' என்ற கேள் விக்கு இறுதியான பதில் காணும்போது மட்டுமே விவா தம் மேலும் நகர்த்த முடியும். என்பது என் கருத்து. அப் போது மட்டுமே நாம் பிரச் சினையின் மையத்தை புரிந்து கொள்ள முடியும். இதற்கும் ஏற்கெனவே மக்கள் மறுவாழ்வு பத்திரிக்கை வெளியிட்டுள்ள மலையரசியின் இலங்கையின் தேசிய இனச்சிக்கலும் மலை யக மக்களும் என்ற கட்டுரை உதவிகரமாக இருக்கும். அவ சியமெனில் அடுத்த கட்டுரை யில் நான் அதனை இங்கு முன் வைக்கிறேன். விவாதம் தொட ரட்டும்! O

## முடிந்த...

(5-ம பக்கத் தொடர்ச்சி)

மலைத்தோட்டங்களில்இவர் களது விரல்கள் தளிர்களை பறிக்காது. சில காலம் நின்று போனால் தேயிலை தோட்ட முதலாளிகள் பலர் தாளம் தமிழ்நாடு முழுவதும் கேட் கும், சிவகாசியில் தீப் பெட்டி தொழிற்சாலைகளில் பதினான்கு மணிநேரம் உழைக் கும் பிஞ்சு விரல்களை நினைக் கும்போது, நான் வேதனைபட வில்லை, இந்த வெட்கங்கெட்ட சமுதாயத்திற்கு சுதந்திரம் தேவையா? தேவையற்ற சட் டங்கள் தேவையா? இவர்களை மனிதத் தன்மையற்று நடத்தும் அரக்கர்களுக்கு புழுத்துபோன புத்திகாரர்களுக்கு ஆடை ஒரு கேடா என்ற கேள்வியைதான் கேட்கிறேன். தொழிலாளியே உன் மீது எனக்கு கோபம் வரு கிறது.

பாட்டாளி நண்பா! மே தினம் கொடி தூக்கி கோஷம் போடும் நாள் அல்ல. உன் உரிமைகளை பெற என்று குரல் எழுப்புகிறயோ, உனக்கு இழைக்கப்படும் கொடுமைக ளுக்கெதிராய் என்று எழுச்சி பெறுகிறாயோ அன்றுதான் உனக்கு மேதினம். அதுவரை மே தினம் உனக்கு சித்திரை மாதமாரியம்மன் பண்டிகைத் தான். O

## கடத்தப்பட்டோரை விடுவிக்கக் கோரி

# உண்ணாவிரதம்; ஊர்வலம்

கடத்தப் பட்டவர்களை கடத்தியவர்கள் விடுவிக்கக் கோரியும், மத்திய, மாநில அரசுகளை மீட்டுக் கொடுக்கக் கோரியும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் பொது மக்களும் தொடர்ந்து உண்ணாவிரதம் ஊர்வலம், ஆர்பாட்டங்கள் நடத்திவருகின்றனர்.

திருச்சி ஆட்சியாளர் அலுவலகம் முன் அடையாள உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டது. அடுத்து அஞ்சல் நிலையத்தின் ஆர்பாட்டமும் நடத்தப்பட்டது.

இந்த கடத்தலைக் கண்டித்தும், இவர்களை மத்திய மாநில அரசு மீட்க வேண்டுமென கோரியும் பலவேறுபட்ட சமூக சங்கங்கள், சேவா அமைப்புகள் தந்திகள்மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் கோரிக்கை விடுத்துள்ளன.

'இந்திய மக்கள் மீது கை வைக்காதே! ஈழ விடுதலை இயக்கமே கடத்தியவர்களை உடனே விடுதலை செய்! மத்திய மாநில அரசே அவர்களை மீட்டுக் கொடு-கடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடு'

'அராஜகம்! அராஜகம்!! தமிழகத்தை ஆள்வது தமிழக அரசா? ஈழப் போராளிகளா? திருச்சியில் ஈழப் போராளிகளில் கடத்தப்பட்டவர்களை மீட்டுக் கொடு! ஈழப் போராளிகளின் அராஜக செயல்களை தடை செய்!

'விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும்.'

இப்படி வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள், திருச்சி தஞ்சை எங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

'கடத்தல்காரர்கள் ஈழ விடுதலைப் போராளிகளாயினும் சரி, வேறு யாராயினும் சரி, ஒரு மனிதரைக் கடத்துவதற்கோ கண்ணைக் கட்டி வைத்துக் கொண்டு செல்வதற்கோ தனியறையில் வைத்து விசாரித்து தண்டனை வழங்குவதற்கோ அவர்களுக்கு எந்த வித அதிகாரமும் கிடையாது எந்த ஓர் இந்திய சட்டமும் இதற்கு இடம் தராது.

'இந்திய அரசின் பாதுகாப்பின் கீழும் தமிழக அரசினதும் மக்களினதும் உபசரிப்பின் கீழும் அடைக்கலம் கொடுக்கப் பட்டிருந்த அகதிகளை தங்க வந்த அந்நியப் பிரஜைகள் அத்துமீறி கடத்தியிருக்கிற செயல் இந்திய அரசையும் தமிழக அரசையும் இந்திய சட்டத்தையும் நீதிமன்றத்தையும், இந்திய காவல் துறையையும் நிர்வாகத்தையும் முற்று முழுதாக நிராகரித்த செயல்: அவமதித்த செயல் குறிப்பாக **இந்தியாவின் பாதுகாப்பு நிர்வாகத் துறைக்கு விடப்பட்ட சவால்.**

இந்த பயங்கர வாதம் தமிழக மண்ணிலிருந்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது. ஆதலால் அது தமிழகத்தின் விருந்தோம்பும் பண்புக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கம்.

**தமிழக மக்களே!**

'இந்த அராஜகச் செயல்கள் தொடர்ந்த நடைபெறுவதற்கு நாம் அனுமதித்து விட்டால் நாளைக்கு விடுதலைப் போராளிகள் என்ற பெயரில் நமது சொந்த வீட்டுக்குள்ளேயே புகுந்து சூறையாடினால் கூட கேட்பதற்கு நாதியில்லாது போய்விடும்.

மீண்டும் இது போன்ற செயல்களில் ஈடுபட ஈழ போராளிகளை அனுமதிக்கலாமா!' என்ற வாசகர்கள் அடங்கிய துண்டுபிரசுரங்களும் விடப்பட்டுள்ளன.

இதுவரை விடுவிக்கப்படாதிருக்கும் அருள் அண்டனி, ஜூட் பெர்னாண்டோ ஆகியோரை விடுவிக்க - மீட்டுக் கொடுக்க கோரி சென்னையில்-தலைமை செயலகத்தின் முன் தொடர் உண்ணா விரதம் இருக்கவும் - தமிழகம் முழுவதும் போராடவும் பல அமைப்புகள் முடிவு செய்துள்ளன. O




## நலிவடைந்தோருக்கு நல்வழி காட்டும் பத்திரிகை

மக்கள் மறுவாழ்வு பத்திரிகையில் வெளிவரும் செய்திகளால் அகதிகளுக்கு பலநன்மைகள் ஏற்படுகின்றன. ஆகையால் மக்கள் மறுவாழ்வு மாதம் இருமுறை மலர வேண்டும்,

செய்தி பத்திரிகைகள் அரசியல், சினிமா போன்ற செய்திகளோடு நின்று விடுகின்றன. எங்காவது ஏழை குடும்பங்கள் தற்கொலை, செய்துக் கொள்வது, கொலை, உயிருடன் வீட்டுக்குள் வைத்து எரிப்பது போன்றவற்றை மட்டும் ஏழைகள் சார்பில் வெளியிடுகின்றன இதனால் செய்திப் பத்திரிக்கைகள் மூலமாக ஏழைகளுக்கு விமோசனம் இல்லை.

ஆகையால், மக்கள் மறுவாழ்வு, ஏழைகள், நலிவடைந்தோர்கள் சார்பாக மாதம் இருமுறை வெளியிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

**ஏ. பழனியாண்டி**
எதுமலை
திருச்சி மாவட்டம்

O

## வாழ்த்துக்கள்!

மக்கள் மறுவாழ்வு ஏப்ரல் மாத இதழில் 8ம் பக்கம் வெளிவந்த ஊராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற தாயகம் திரும்பியோர் பட்டியலை வாசித்த போது உண்மையிலேயே என் மனம் ஆனந்தமடைந்தது. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

**ஜெ. தனம்**
துறைமங்களம்
பெரம்பலூர் வட்டம்

O

தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிப்பதில் ஏற்படும் சிக்கலுக்கு ஊழலே காரணம் என்று சுட்டி காட்டியது நன்றி

**கலைச்செல்வன்**
மேல்தட்டப் பள்ளம்
நீலகிரி

## வெற்றி பெற்றோருக்கு வாழ்த்துக்கள்!

தாயகம் திரும்பியோர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்ட 'மக்கள் மறுவாழ்வு' ஆற்றி வரும் பணியினை பாராட்டுகின்றேன். ஊராட்சி தேர்தலில் பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

**து. கோவிந்தராஜன்**
கல்லடிபட்டி
திருச்சி மாவட்டம்

Editor & Publisher: T.S. RAJU, Gangaiamman koil Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B E. Colony 4th Street, Madras-24.

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி:

த. பை. எண். 5560
சென்னை—600094

## திருச்சி அகதிகள் முகாமில் ஆள்கடத்தல் சம்பவம் :

# ஒருவர் திரும்பினார்! இருவர் கதி என்ன?

**திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலிருந்து இரு அகதிகள் கடத்தப்பட்டார்கள். அவர்களைத் தேடிச் சென்ற ஒருவரும் இருவாரங்களுக்குப் பின்னால் கடத்தல் காரர்களால் விடப்பட்டார். மற்ற இரு அகதிகள் கதி என்ன என்று இதுவரை தெரியவில்லை.**

அதே வேளையில் மேலும் ஆறு அகதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டது அவர்களும் கடத்தப் படுவார்கள் என்று நோட்டீஸ் ஒட்டப் பட்டும் உள்ளது.

இந்த சம்பவங்கள், அகதிகள் முகாமிலும் வெளியிலும் வாழும் அகதிகள் மத்தியிலும், அகதிகள் மத்தியில் சமூகசேவைகள் புரிவோருக்கும் பெரிதும் கலக்கத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடத்தப் படவிருப்பதாக பயமுறுத்தப் பட்டவர்களும் இந்திய வம்சா வழி மலையகத் தமிழர்களாக இருப்பதால் இது இலங்கையிலிருந்து வந்துள்ள மலையாகத் தமிழரிடையே பீதியையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கூறிய விவரம்: 23-3-85 இரவு 9-30 மணியளவில் முகாமுக்கு வந்த இருவர் முகாமிலுள்ள 'இலங்கை அகதிகள் நலன்புரி சங்கத்தின்' செயலாளரான திரு. அருள் அண்டனியைக் கண்டு தாம் 'தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை' (டெலோ) சேர்ந்தவர்கள் என்றும், சில பண வசதியுள்ள பிரமுகர்கள் திருச்சி முகாமில் உள்ள அகதிகளுக்கு பொருள் உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும், அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தம்முடன் வரும்படியும் அவரை அழைத்திருக்கின்றனர். திரு. அருள் அண்டனியும் தனக்குத் துணையாக செபஸ்தியன் என்னும் மற்றொரு அகதி இளைஞரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஆனால் மறு நாள் 24-3-86 அன்று திரு. செபஸ்தியன் மட்டும் திரும்பி வந்துள்ளார். இவர் கொடுத்த தகவலின் படி அவர்கள் நாமக்கலுக்குச் சென்றிருந்தாகவும் அங்கு உதவி வழங்குவதற்கு இருந்தவர்கள் இல்லாததால் தாங்கள் சேலம் போவதாகவும் தம்மோடு அருள் அண்டனியை மட்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறி, திரு. செபஸ்தியனை திரும்பி அனுப்பிவிட்டனர்.

26ம் தேதியையும், திரு அருள் அண்டனி திரும்பி வராததால் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. ஜுட் பெர்னாண்டோ என்பவர் திரு. செபஸ்தியனையும் மேற்படி டெலோ இயக்கத்தின் சார்பாக திருச்சியிலுள்ள திரு. ஆனந்தன் என்பவரையும் அழைத்துக்கொண்டு 26ம் தேதி இரவு குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றுள்ளார். 27-3-86 காலையில் ஜுட் பெர்னாண்டோவும் செபஸ்தியனும் மட்டும் திரும்பி வந்தனர்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வேறு ஒருவரை அழைத்துக் கொண்டு வா என்று கடத்தல்காரர்கள் கூறியதன் பேரில் திரு. ஜுட் பெர்னாண்டோ திருச்சி முத்தரசநல்லூரில் உள்ள பி.எஸ்.ஏ. என்னும் சமூகநல அமைப்பின் தாயகம் திரும்பியோர் மத்தியில் சமூக சேவைகள் செய்து வரும் திரு. நாதன் என்னும் இந்தியரையும் அழைத்துக் கொண்டு மீண்டும் 27ம் தேதி மாலை நாமக்கல்லுக்குச் சென்றுள்ளார். ஆனால் போனவர்கள் ஒருவரும் திருப்பவில்லை.

கடத்தப்பட்ட 15 தினங்களுக்கு பின்னால் நாதன் மட்டுமே கடத்தல் காரர்களால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இவர்களுக்கு அருகேயுள்ள பசுபதிபாளையம் என்ற இடத்தில் 13ந் தேதி அன்று கடத்தல்காரர்களின் காரில் இறக்கி விடப்பட்டுள்ளார் அவர்கள் கட்டப்பட்ட இடத்திலே கொண்டு வரப்பட்டு இறக்கி விடப்பட்டிருக்கிறார். கடந்த 15 நாட்களாக எங்கே இருந்தார் என்று அவரால் சொல்ல முடியவில்லை.

கடத்தல் காரர்களில் கடுமையான சித்திரவதைக்குள்ளாகி இருக்கிறார் எனத் தெரிகிறது இவரது மார்பில் இடப்பக்கத்தில் எலும்பொன்று முறிந்திருக்கிறது. 18 இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. உட்காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இவரது நிலையிருந்து மற்ற இருவரும் கொடுமையான சித்திரவதைக்கு ஆளாகி இருப்பர் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில் கடத்தப்பட்டுள்ள ஜுட்பெர்னாண்டோவின் சகோதரி ஒருவரும் கடத்தப்பட்டுள்ளாதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் கடத்தப்பட்டதற்கு காரணம் தெரியவில்லை.

திருமதி அருள் அண்டனி, திருமதி நாதன், திரு. ஜுட் பெர்னாண்டோவின் தாயார் திருமதி ஜெயப்ரீட் பர்னாண்டோ ஆகிய மூவரும், எல்லா விடுதலை இயக்கத்தினரையும் மத்திய மாநில அரசுகளுக்கும் இவர்களை மீட்டுத் தருமாறு கோரிக்கை விட்டுள்ளனர்.

திரு. அருள் அண்டனிக்கு மனைவியும் 2 வயது பெண் குழந்தை, 6 மாத ஆண் ஆகியோரும் உள்ளனர். 29 வயதுள்ள இளைஞர்.

திரு. ஜுட் பெர்னாண்டோ திருமணமாகாத இளைஞர். பெற்றோர்களுடனும், சகோதரிகளுடனும் அகதியாக வந்து தஞ்சம் புகுந்தவர்.

திரு. பி.எஸ. நாதன் 35வயதுடைய திருமணமானவர். மனைவியும், 2 வயது ஆண் குழந்தையும் உடையவர். **திருச்சி நகரிலேயே வசிப்பவர்.** இவர் சிறிமா-சாஸ்திரி உடன் படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்து 1973ல் தாயகம் திரும்பியவர் என்பதும் நீண்ட காலமாகவே சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. O